விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 200 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 22 சனிக்கிழமை (06.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## மகளிர் இல்லத்தை மூடுமாறு நான் உத்தரவிடவில்லை
### பழைய மாணவிகளிடம் ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகளிர் இல்லத்தை மூடுமாறு நான் உத்தரவிடவில்லை என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை மகளிர் இல்லத்தில் தங்கியிருந்து படித்துப் பட்டம் பெற்ற சுமார் 25 பழைய மாணவிகள் நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்தனர்.

ஆதரவற்றிருந்த எங்களை வளர்த்து ஆளாக்கிய தெல்லிப்பழை மகளிர் இல்லம் எங்கள் தாய்வீடு.

நாங்கள் இன்று சொந்த வீடுகளில் வாழ்வதற்கு எங்கள் தாய் வீடான மகளிர் இல்லமே 15

## உரிய திகதியில் தேர்தல் நடைபெறும்
## தேர்தல்கள் ஆணையாளரிடம் விடயங்களை விளக்கியுள்ளேன்
### மகாநாயக்க தேரரிடம் ரணில்



(கொழும்பு)

உரிய திகதியில் தேர்தல் நடைபெறும் எனவும் தேர்தல்கள் ஆணையாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் விடயங்களை தெளிவாக விளக்கியதாகவும் 02

### ஆளுநரால் நியமிக்கப்பட்ட குழு விசாரணை
# தெல்லிப்பழை மகளிர் இல்லத்தில் முறைகேடுகள் எதுவும் இல்லை
### ஆளுநரிடம் நேற்று அறிக்கை சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

**தெல்லிப்பழை மகளிர் இல்லத்தில் முறைகேடுகள் எதுவும் இடம்பெறவில்லை என ஆளுநரால் நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட குழு தனது விசாரணை அறிக்கையில் தெரியப்படுத்தியுள்ளது.**

தெல்லிப்பழை மகளிர் இல்லத்தில் எந்தவிதமான முறைகேடுகளும் நடக்கவில்லை. பொலிஸாரின் உத்தரவுக்கமைய, மகளிர் இல்லத்தின் பாதுகாப்புக் கருதியே கண்காணிப்புக் கமராக்கள் (CCTV) பொருத்தப்பட்டுள்ளன என வடக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த மூவர் அடங்கிய குழு தனது அறிக்கையை நேற்று (05) மாலை ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸிடம் சமர்ப்பித்துள்ளது.

தெல்லிப்பழை மகளிர் இல்லத்தை மூடுமாறு வடக்கு மாகாண ஆளுநர் உத்தரவிட்டதாக வெளிவந்த செய்தி தமிழ் மக்கள் மத்தியில் மிகப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

அத்துடன் இந்து சமயத்துக்கு எதிரான கூட்டுச் சதி வேலை நடக்கிறதா? என்ற சந்தேகத்தையும் தமிழ் மக்கள் மத்தி 15

### முல்லைத்தீவில்
## ஆணொருவரின் சடலம் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஐயங்கன் குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப் பகுதியை அண்மித்துள்ள பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நீர்ப்பாசனக் குளமான 15

## வேலணை கடற்கரையில்
### மீனவரின் சடலம் கரையொதுங்கியது



(யாழ்ப்பாணம்)

வேலணை கடற்கரையில் மீனவர் ஒருவரின் சடலம் நேற்று கரை ஒதுங்கியுள்ளது. 15


## மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண டில்லி வாருங்கள்
### இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் டக்ளஸுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் புதுடில்லிக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்மாவட்டச்செயலகத்தில், மாவட்ட 15

## 13ஆவது திருத்தச் சட்டத்தை தாமதமின்றி நடைமுறைப்படுத்துக
### முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய



(கொழும்பு)

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

தமிழரசுக்கட்சியின் 02

### ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்
## 3 அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல்

(கொழும்பு)


2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி சமிந்திரதயான்லெனவ 15

### மின்சார விநியோகம்
## அத்தியாவசிய சேவையாக
### வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

மின்சார விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகள், பெற்றோலிய உற்பத்தி மற்றும் எரிபொருள் விநி 02

## அத்தியாவசியப் பொருட்களை விடுவிக்க நடவடிக்கை
### நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

சுங்கத் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கை நிறைவடைந்துள்ள நிலையில், தாமதமாகியுள்ள அத்தி 15

நடுவு நிலை தவறாத செய்திகளைத் தாங்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் உடனடியாக பணிக்கு திரும்ப வேண்டும்

## உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ள இளைஞர்களின் வாழ்க்கையை மேலும் சீர்குலைக்காமல், அவர்களின் காலத்தை வீணடிக்காமல், அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களையும் கடமைக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்வதாக உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் இரண்டு மாத சம்பளம் மற்றும் ஏப்ரல் மாதத்திற்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கும், அவர்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து, அவற்றை உதய செனவிரத்ன குழுவிற்கு சமர்ப்பித்து, 2025 வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்குவதாகவும் இராஜாங்க அமைச்சர் உறுதியளித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் இதனைத் தெரிவித்தார்.

'இந்நாட்டில் உள்ள 17 பல்கலைக்கழகங்கள் மற்றும் 19 ஒன்றிணைந்த பட்டப் பின்படிப்பு நிறுவனங்களின் 14,600 கல்விசாரா ஊழியர்கள் 65 நாட்களாக பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதால் முழு உயர்கல்வித்துறையும் முடங்கியுள்ளது.

இந்நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்கவிருக்கும் 250,000 இளைஞர்களின் வாழ்க்கை சீர் குலைந்து, அவர்களின் காலத்தை வீணடிப்பதுதான் இதன் துயரமான பிரதிபலனாகும்.

2019 இல் கோவிட் தொற்று, 2020 இல் பொருளாதார நெருக்கடி, 2021 இல் போராட்டம் போன்றவற்றால் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்ட இந்த மாணவர்கள், அந்த சவால்களையெல்லாம் எதிர் கொண்டு, பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 வீதமானோரில் உள்ளடங்கினாலும் கூட, இந்தப் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தால் அவர்கள் மேலும் குழப்பமடைந்திருப்பது மிகப்பெரும் துயரம் என்றே கூற வேண்டும் என்றார். (ம-7,10)

# சட்டத்தரணி நமநாதனின் நூல் வெளியீடு நாளை

(யாழ்ப்பாணம்)

சிரேஷ்ட சட்டத்தரணி கனக. நமநாதன் எழுதிய, சுதந்திரத்திற்குப் பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும் என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தில் இடம் பெறும்.

ஓய்வு நிலை சுங்கப் பணிப்பாளர் த.கணநாதலிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகப் பதிவாளர் வி.காண்டீபன் கலந்துகொள்வார்.

வெளியீட்டுரையை இலங்கை சிறுவர் நிதிய நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் கலாநிதி. இ.தவசீலன் நிகழ்த்த,

நூல் ஆய்வுரையை வலம்புரியின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் நிகழ்த்துவார்.

முதற் பிரதியை வர்த்தகர் சி.தினேஸ்குமார் பெற்றுக் கொள்வார். ஏற்புரையை நூலாசிரியர் சட்டத்தரணி கனக. நமநாதன் ஆற்றுவார். (ம)

### தலைமன்னாரிலிருந்து

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் தனுஷ்கோடியில் தஞ்சம்

தலைமன்னாரிலிருந்து தாய் மற்றும் 2 குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் அகதிகளாக தனுஷ் கோடிக்கு சென்றுள்ளனர்.

குறித்த மூவரும் நேற்று காலை தனுஷ்கோடி சென்றடைந்தனர்.

தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த யோக வள்ளி (வயது-34), அவரது பிள்ளைகளான அனுஜா (வயது-08),மிஷால் (வயது-05) ஆகியோர் தலைமன்னாரிலிருந்து படகில் புறப்பட்டு தனுஷ்கோடி கடல் பகுதியை சென்றடைந்தனர்.

தகவல் அறிந்த கடற் பொலிஸார் தனுஷ்கோடி கடற்கரை பகுதியிலிருந்து விசாரணைக்காக மூன்று பேரையும் மண்டபம் மரைன் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர்.

மூவரும் இந்தியா செல்வதற்கு படகுக் கட்டணமாக 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலுத்தி வந்ததாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

விசாரணைக்கு பின்னர் 3 பேரையும் பொலிஸார் மண்டபத்தில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் ஒப்படைத்தனர். (ம-7,10)

# ரூ 300 ஐ நெருங்கியது டொலரின் பெறுமதி

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி நேற்றைய நாளுக்கான நாணயமாற்று விகிதங்களை வெளியிட்டுள்ளது.

அதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 300.06 ஆகவும் விற்பனைப் பெறுமதி 309.30 ஆகவும் பதிவாகியுள்ளது.

ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 382.17 சதம் ஆகவும் விற்பனைப் பெறுமதி 395.91 ஆகவும் பதிவாகியுள்ளது.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 322.86 ஆகவும் விற்பனைப் பெறுமதி 336.39 ஆகவும் பதிவாகியுள்ளது.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 218.99 ஆகவும் விற்பனைப் பெறுமதி 228.60 ஆகவும் பதிவாகியுள்ளது.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 200.09 ஆகவும் விற்பனைப் பெறுமதி 210.33 ஆகவும் பதிவாகியுள்ளது.

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 220.36 ஆகவும் விற்பனைப் பெறுமதி 230.78 ஆகவும் பதிவாகியுள்ளது. (ம-7,10)

### வெளிநாடு அனுப்புவதாக

# பலரை ஏமாற்றி பண மோசடி செய்த பெண் ஒருவர் கைது

(கொழும்பு)

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக பலரை ஏமாற்றி பண மோசடி செய்த பெண் ஒருவரை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவினர், கைது செய்துள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனமொன்றினை முன்னெடுத்து வந்த, பெண் உரிமையாளர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாய் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளில் வேலை வாய்ப்பு பெற்று தருவதாக கூறி, சுமார் 40 இலட்சம் ரூபாயை அவர் பண மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவினருக்கு 14 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில், குறித்த பெண் கைது செய்யப்பட் டுள்ளார்.

சந்தேக நபரான பெண்ணினால் முன்னெடுக்கப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் அனுமதிப் பத்திரமும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. (ம-7,10)

## தேர்தல்கள்...

இலங்கை ராமன்ய மகா நிகாயவின் மகாநாயக்க வண. மகுலேவே விமல மகாநாயக்க தேரரைச் சந்தித்து நலன் விசாரித்ததுடன், சிறு கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

கடன் மறுசீரமைப்பு செயல்முறை தொடர்பாக நாங்கள் இப்போது தனியார் கடன் வழங்குநர்கள் மற்றும் வர்த்தக கடன் வழங்குநர்களுடன் கலந்துரையாடலை முடித்துள்ளோம்.

நாங்கள் செலுத்த வேண்டிய கடனில் இருந்து சுமார் 08 பில்லியன் டொலர்களை குறைக்க முடிந்துள்ளது என்ற நற்செய்தியை உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## அத்தியா...

யோகம் என்பன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அத்தியாவசிய சேவைகளாக மாற்றப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக மாற்றும் வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியின் செயலாளர் ஈ.எம்.எஸ்.பி ஏக்கநாயக்கவினால் வெளியிடப்பட்டது.

எனவே, இந்த வர்த்தமானி அறிவித்தலின் மூலம், எந்தவொரு அரசாங்க நிறுவனமோ, திணைக்களமோ, உள்ளூராட்சி மன்றமோ, கூட்டுறவுச் சங்கமோ அல்லது அவற்றின் கிளையோ வழங்கும் சேவைகள் சாதாரண மக்களின் வாழ்வாதாரத்தைப் பேணுவதற்கு அத்தியாவசிய சேவைகளாக மாறியுள்ளன. (ம-7,10)

## 13 ஆவது...

மூத்த தலைவர் இரா.சம்பந்தனின் மறைவையொட்டி வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

குறித்த அறிக்கையில், இலங்கை உருவாக்கிய தலைசிறந்த அரசியல்வாதிகளில் ஒருவரான இரா. சம்பந்தன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையன்று ஒட்டுமொத்த தேசத்திடமிருந்தும் விடைபெறவுள்ளார்.

அவர் தனது வாழ்நாள் முழுவதும் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள்மீது அபரிமிதமான அன்புடனும், அனைத்து இனங்களும் ஒன்றாக வாழக்கூடிய நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவும் தொடர்ச்சியாகக் குரலெழுப்பினார்.

வடக்கு, கிழக்கு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மிகமுக்கிய அரசியல் ஓட்டத்துக்குத் தலைமை தாங்கியவரும், இலங்கைப் பாராளுமன்றத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்தவருமான சம்பந்தன் தேசத்திடமிருந்து விடைபெறும் இந்நேரத்தில் இலங்கையர்களாகிய நாம் கவனம் செலுத்தவேண்டிய பல முக்கிய விடயங்கள் இருப்பதாக நாம் கருதுகின்றோம்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கான நமது பொறுப்பைக் கருத்திற்கொள்கையில் சம்பந்தன் போன்ற உன்னத, அகிம்சைவழி தலைவரை இழந்தது நாட்டுக்குப் பேரிழப்பாகும்.

ஆனால் அவர் தனது வாழ்நாள் முழுவதும் காண்பித்த அர்ப்பணிப்பைப் பாராட்டி, ஒன்றுபட்ட தேசம் தொடர்பான எமது அபிலாஷைகளைக் கைவிடாமல் முன்நோக்கிச் செல்வதன் ஊடாக நாட்டில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுவது நமது பொறுப்பாகும்.

அதன்படி இந்நாட்டின் தேசிய பிரச்சினைகளுக்கான தீர்வை எமது எதிர்காலச் சந்ததியினரிடம் நாம் ஒப்படைக்கக்கூடாது. நாட்டின் அடிப்படை சட்டத்துக்கு மதிப்பளித்து, 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

இலங்கைப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்துக் கட்சிகளும் விசேட கவனம் செலுத்தி ஒற்றுமையுடன் இதனை நிறைவேற்ற வேண்டும்.

ஒரு சகாப்தத்தை அடையாளப்படுத்திய இரா.சம்பந்தன் நம்மைவிட்டு விடை பெற்றிருக்கும் இத் தருணத்தில் அதற்காக ஒட்டுமொத்த தேசமும் உறுதிபூண வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 நாட்களுக்குள் 1200 அலுவலகங்கள்

## ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து புதிய திட்டங்கள்



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரசார நடவடிக்கைகளுக்காக கொழும்பு மாவட்டத்தில் 1200அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளதாக கட்சியின் தேசிய செயலாளர் ரவிகருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்து நாட்களுக்குள் குறித்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து கொழும்பு மாவட்டத்தில் புரட்சியை ஏற்படுத்தி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றியடையச் செய்வதற்கு தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி அடுத்த மாதம் முழுவதும் தினசரி தேர்தல் பேரணி நடத்த திட்டமிடப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-6)

# கடந்த வாரத்தில் மட்டும் 846 டெங்கு நோயாளர்கள்

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு

(கொழும்பு)

**நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் கடந்த வாரத்தில் 846 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.**

அதன்படி, கொழும்பு மாவட்டத்திலிருந்து 269 டெங்கு நோயார்களும், கம்பஹா மாவட்டத்திலிருந்து 146 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கண்டி மாவட்டத்திலிருந்து 93 டெங்கு நோயாளர்கள் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 6 மாத காலப் பகுதிக்குள் 28,239 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (நி-6)

# பிரித்தானிய தேர்தல் வரலாற்றில் சாதனை படைத்த ஈழத்தமிழ் பெண்



(லண்டன்)

பிரித்தானியாவில் தொழிற் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஈழத்து தமிழ் பெண் உமா குமரன் ஸ்ராட்போட் அன்ட் பௌவ் தொகுதியில் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன் போது தொழிற்கட்சி அமோக வெற்றிபெற்று ஆட்சியமைக்கும் நிலையில், உமா குமரன் தன்னுடன் போட்டியிட்ட வேட்பாளர்களை விட பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளதுடன், அவருக்கு 19,145 வாக்குகள் கிட்டியுள்ளன.

அதன் படி, இது அந்த தொகுதியில் கிட்டிய வாக்குகளில் 44.1 வீதமாகும்.

இதன் மூலம், ஈழத்தமிழ் பூர்வீகத்தையும் தமிழ் உணர்வையும் கொண்ட புதிய பாராளுமன்ற உறுப்பினராக கனடாவுக்கு அடுத்தபடியாக பிரித்தானியாவிலும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் உருவா கியுள்ளார். (நி-6)

# கட்சி தலைமையகத்திற்கு முன் கடமைகளை பொறுப்பேற்றார் தயாசிறி



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மீண்டும் கட்சியின் தலைமையகத்திற்கு முன்பாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்

அவரை கட்சித் தலைமையகத்திற்குள் பிரவேசிக்க பொலிஸார் அனுமதிக்காத நிலையில் தயாசிறி ஜயசேகர இவ்வாறு கட்சித் தலைமையகத்திற்கு முன்பாக கடமைகளை பொறுப்பேற்றதாக தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக தயாசிறி ஜயசேகர தனது கடமைகளை மீள ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுத்திருந்தார்

மேலும் கட்சியின் சட்டபூர்வமான பொதுச் செயலாளராக தாம் இன்னமும் செயற்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# அதானியின் காற்றாலை மின்சாரத்திட்டம்

## 20 வருடங்களுக்கும் நிலையான கட்டண அறவீடு

(கொழும்பு)

அதானி கிரீன் எனர்ஜியின் காற்றாலை திட்டத்தின் ஊடாக, வழங்கிய கட்டணங்கள் 20 வருட ஒப்பந்தத்தின் முழுக் காலத்திற்கும் நிர்ணயிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் அதானி பவர் லிமிடெட் மற்றும் அதானி எனர்ஜி சொல்யூஷன்ஸ் லிமிடெட் ஆகியவற்றின் முகாமைத்துவப் பணிப்பாளரும், தலைவருமான அனில் சர்தானா இதனை தெரிவித்துள்ளார்.

அதானி குழுமத்தின் உலகளாவிய நிறுவன தலைமையகத்தில் அண்மையில் இலங்கை ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

"கட்டணங்களில் வெளிப்படைத்தன்மையின் அவசியத்தை சர்தானா இதன்போது வலியுறுத்தியுள்ளார்

முன்னதாக மற்ற மின் நிறுவனங்கள் ஆரம்பத்தில் குறைந்த விலையை கூறின. ஆனால் பின்னர் கட்டணங்களை அதிகரித்தன,

இதனால் நுகர்வோர் மீது சுமை ஏற்படுகிறது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மன்னார் மற்றும் பூநகரியில் இரண்டு காற்றாலை மின்சார நிலையங்களை அமைக்க அதானி நிறுவனம் முன்வந்துள்ளது.

484 மெகாவோட் ஒட்டுமொத்த நிறுவப்பட்ட திறனை நோக்காக கொண்டு, ஒரு பில்லியன் டொலர்களுக்கு மேலான ஒட்டுமொத்த முதலீட்டுடன் இந்த திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன" என தெரிவித்தன. (நி-6)

# மட்டு.வாகரையில் சூறாவளி

## 12 வீடுகள் சேதம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிருமிச்சை பிரதேசத்தில் மழையுடனான மினிசூறாவளி காற்றினால் பல மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன் 12 வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டு சேதமடைந்துள்ளது.

வீடுகளில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக காயம் ஏதுவுமின்றி உயிர்தப்பியுள்ளனர் .

சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக வாகரை பிரதேச செயலாளர் ஏ.அருணன் தெரிவித்தார்.

இந்த மினி சூறாவளி காற்றினால் 12 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் எவருக்கும் காயங்கள் ஏதும் ஏற்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி-6)



கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் STEPS நிறுவனத்தில் நடைபெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கான பொது ஆங்கில பாடநெறியில் பங்குபற்றிய உத்தி யோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு அருகில் இடம்பெற்றது.

(படம்-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்திய வீரர்களை வரவேற்க திரண்ட ரசிகர்கள்




உலகக் கிண்ணம் வென்ற இந்திய அணியினர் நேற்று முன்தினம் மதியம் டில்லியில் இருந்து கிளம்பி, மாலை மும்பை வந்தனர். கப்டன் ரோகித் சர்மா, ஹர்திக் பாண்ட்யா கோப்பையை ஏந்தியபடி விமான நிலையத்தில் இருந்து வெளியே வந்தனர்.

பின் அங்கிருந்து மரைன் டிரைவ் பகுதியில் உள்ள நாரிமன் பாயன்ட் பகுதிக்கு செல்வதற்கு தயாராக நின்றிருந்த "ஸ்பெஷல்" பேருந்தில் வீரர்கள் ஏற வெற்றிப் பேரணி தொடங்கியது.

"இந்தியா சம்பியன்" என பொறிக்கப்பட்ட ஸ்பெஷல் ஜெர்சியுடன் வீரர்கள் பேருந்தின் மேற்பகுதியில் நின்று வந்தனர். சாலையில் இருபுறமும் திரண்ட ரசிகர்கள், தேசியக் கொடியுடன் "வந்தே மாதரம்..." என பாடினர்.

வழக்கமாக மரைன் டிரைவ் பகுதியில் இருந்து 5 நிமிடத்தில் மைதானத்தை அடைந்து விடலாம். ஆனால் மக்கள் வெள்ளத்தில் பேருந்து ஊர்ந்து தான் சென்றது. இதனால் மைதானம் செல்ல 1 மணி நேரம், 6 நிமிடம் தேவைப்பட்டது.

"ரி-20" உலகக் கிண்ணம் வென்ற இந்திய கிரிக்கெட் அணிக்கு பி.சி.சி.ஐ., சார்பில் ரூ.125 கோடி பரிசு தொகைக்கான "செக்" வீரர்களிடம் வழங்கப்பட்டது. (நி-6)

# யூரோ கால்பந்து போட்டி துருக்கி வெற்றி நடை



"யூரோ" கோப்பை கால்பந்து காலிறுதிக்கு துருக்கி அணி முன்னேறியது.

ஜேர்மனியில், ஐரோப்பிய கால்பந்து சம்பியன்ஷிப் ("யூரோ" கோப்பை) நடக்கிறது. இதன் "ரவுண்டு-16" போட்டியில் ஆஸ்திரியா, துருக்கி அணிகள் மோதின.

ஆட்டத்தின் முதல் நிமிடத்தில் துருக்கியின் மெரிஹ் டெமிரல் ஒரு கோல் அடித்தார். இதற்கு ஆ ஸ்திரிய வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முதல் பாதி முடிவில் துருக்கி 1-0 என முன்னி லையில் இருந்தது.

இரண்டாவது பாதியில் மீண்டும் அசத்திய துருக்கி அணிக்கு 59ஆவது நிமிடத்தில் டெமிரல் மீண்டும் ஒரு கோல் அடித்து கைகொடுத்தார். ஆட்டத்தின் 66ஆவது நிமி டத்தில் ஆஸ்திரியாவின் மைக்கேல் கிரி கோரிச் ஒரு கோல் அடித்து ஆறுதல் தந்தார். கடைசி நிமிடம் வரை போரா டிய ஆஸ்திரிய அணியினரால் கூடுதலாக கோல் அடிக்க முடிய வில்லை.

ஆட்டநேர முடிவில் துருக்கி அணி 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது. (நி-6)

# ஈகுவடாரை வீழ்த்தி அரையிறுதியில் ஆர்ஜென்டினா




கோபா அமெரிக்கா கால்பந்து தொடரின் முதல் காலிறுதி ஆட்டம் இந்திய நேரப்படி நேற்றுக் காலை நடைபெற்றது. இதில் ஆர்ஜென்டினா- ஈகுவடார் அணிகள் மோதின.

ஆட்டம் தொடங்கிய 35ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்டினா வீரர் மார்ட்டினேஸ் கோல் அடித்தார். கார்னர் வாய்ப்பில் தலையால் முட்டி கோல் அடித்தார். இதனால் ஆர்ஜென்டினா முதல் பாதி நேரத்தில் 1-0 என முன்னிலை பெற்றது.

2ஆவது பாதி நேரத்தில் ஈகுவடார் அணி வீரர்கள் கோல் அடிக்க முயற்சித்தனர். ஆனால் பலன் கிடைக்கவில்லை. 91 ஆவது நிமிடத்தில் ஈகுவடார் அணிக்கு கோல் அடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. சக வீரர் பாஸ் செய்த பந்தை கெவின் ரோட்ரிக்ஸ் தலையால் முட்டி கோலாக்கினார். இதனால் போட்டி 1-1 என சமநிலையில் முடிந்தது.

இதனால் பெனால்டி ஷூட் அவுட் முறை கடைப்பிடிக்கப்பட்டது. ஆர்ஜென்டினா முதலில் ஆரம்பித்தது. மெஸ்சி முதல் வாய்ப்பை பயன்படுத்த பந்து கோல் கம்பத்தில் பட்டு இதனால் 0-0 என ஆனது. அதன்பின் ஆர்ஜென்டினா தொடர்ந்து 3 வாய்ப்பிலும் கோல் அடித்தது. ஈகுவடார் 2ஆவது வாய்ப்பிலும் கோல் அடிக்காமல் தவறவிட்டது. 3 ஆவது மற்றும் 4 ஆவது முறை கோல் அடித்தது. இதனால் ஆர் ஜென்டினா 3-2 என முன்னிலையில் இருந்தது.

ஐந்தாவது மற்றும் கடைசி வாய்ப்பை ஆர்ஜென்டினா கோலாக மாற்றியது. இதனால் 4-2 என ஆர்ஜென்டினா வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுநர்களின் சட்டவிரோத நியமனங்களை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கபே வலியுறுத்து




(கொழும்பு)

மாகாண ஆளுநர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற சட்ட விரோத நியமனங்களை உடனடியாக இரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கபே அமைப்பு, தேர்தல் ஆணைக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கபே தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் விசேட கடிதமொன்றை தேர்தல் ஆணைக் குழுவிற்கு நேற்று வெள்ளிக் கிழமை அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"கிழக்கு, மத்திய மற்றும் தென் மாகாணங்களின் ஆளுநர்கள் மூலமாக உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் மேயர்கள் மற்றும் தவிசாளர்களுக்கு ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக இணைப்பாளர் பதவியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


அதனூடாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான வாகனங்களைப் பாவிப்பதற்குரிய அனுமதி வழங்கப்பட்டிருப்பதன் ஊடாக தேர்தல் சட்டத்தின் பிரகாரம் அரச சொத்து துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பு மனுத் தாக்கல் செய்து தேர்தல் தினம் குறிப்பிடப்படாமல் கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இவ்வாறான நியமனங்கள் வழங்கப்படுவது சட்டவிரோதமாகும்.

அதேபோன்று இந்த நியமனத்தின் ஊடாக அரச சொத்துக்கள் பாவிக்கப்படுவது தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறுகின்ற செயற்பாடாகும் என்பதையும் தேர்தல் ஆணைக் குழுவிற்கு தெளிவுபடுத்தியுள்ளோம்.

இதேநேரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான வாகனங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர் வசமே காணப்படுவதனால் இவ்வாறு அரச சொத்து துஷ்பிரயோகத்துக்கு துணைபோகக்கூடிய அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" எனகபே அமைப்பின்நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்தார். (நி-6)

# இரா.சம்பந்தனுக்கு திருமலையில் அஞ்சலி



(திருமலை)

யாழ்ப்பாணத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனின் பூதவுடல் தற்போது திருகோணமலைக்கு கொண்டு செல்லப்பட்டு மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

யாழ். தந்தை செல்வா கலையரங்கில் சம்பந்தனின் பூதவுடலுக்கு நேற்று முன்தினம் பலரும் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை விமானம் மூலம் திருகோணமலை சீனக்குடா நிலையத்திற்கு கொண்டுவரப்பட்ட அன்னாரின் பூதவுடல் விமானப்படையினருடைய மரியாதையுடன் வாகனப்பேரணியாக அன்னாரின் இல்லத்திற்கு கொண்டுச்செல்லப்பட்டது.

இதில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# காணி விலையில் திடீர் மாற்றம்

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் சராசரி காணி விலையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக சர்வதேச ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை நிறுவனமான ஆராய்ச்சி நுண்ணறிவுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது சந்தை அவதானிப்புகளுக்கமைய கடந்த 20 ஆண்டுகளில் ஏற்பட்ட முதலாவது சரிவாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விசேடமாக கொழும்பு போன்ற நகரங்களில் நிலப்பற்றாக்குறை காரணமாகக் காணிகளின் பெறுமதிகள் அதிகரித்து வந்தன.

இலங்கையின் உள்நாட்டு மோதலின் போதும் கொழும்பில் காணி விலை தொடர்ந்து உயர்ந்த நிலையில் இருந்து வந்தன.

எனினும் இந்த ஆண்டின் முதல் காலாண்டில் மேல் மாகாண புறநகர்ப் பகுதிகளில் காணிகளின் சராசரி விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

பொருளாதார நெருக்கடிகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தினால் பரிந்துரைக்கப்பட்ட மறுசீரமைப்புகளால் தூண்டப்பட்ட பலதரப்பட்ட காரணிகள் இந்த சரிவுக்குப் பெரும்பாலும் காரணமாக இருக்கலாம் என தொழில்துறை வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். (நி-6)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் நடனபாட ஆசிரியராகப் பணியாற்றும் திருமதி. கரன்சன் சுதர்சினி அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி. குணசீலி லூர்த்துநாதன் (மேரி)**

அவர்கள் 05.07.2024 நேற்று காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்புடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(139)

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும்
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்.


# இராசிபலன்

06.07.2024
ஆனி 22, சனிக்கிழமை
பிரதமை பின்னிரவு 5.11 மணிவரை

புனர்பூசம் பின்னிரவு 5.58 மணிவரை
சுபநேரம் 2.58-4.28 மணி வரை
இராகுகாலம் 8.58-10.28 மணிவரை

சந்திராஷ்டமம்- விசாகம்

வளவன்




ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், எடுத்த காரியங்களில் உற்சாகம் காட்டுவீர்கள்.




பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற பிரார்த்திப்பீர்கள்.




ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.




கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும்.




வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், ஆனந்தமான நாள்.




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், அந்நியதேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.




வரவும் செலவும் சமமாகும் நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எதையும் யோசித்துச் செய்வது நல்லது, கௌரவக் குறைவான நாள்.




பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுணடு, அனுபவம்மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும்.




எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், நண்பர்களுடன் இணைந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும்.




அரைகுறையாக இருந்த காரியங்களை நிறைவேற்றுவீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், நிலையான வருமானத்திற்கு வழியமைப்பீர்கள், திறமைகள் வெளிப்படும் நாள்.




அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.




உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.

கோபப்படாமல் இருந்துவிடாதே கோமாளியாக்கி விடுவார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிகிச்சை வழங்கலை முன்னெடுங்கள் மருத்துவமனைக்கு முன் திரண்ட மக்கள்

## முன்னாள் நகரசபை உறுப்பினர் கைதாகி பிணையில் விடுதலை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் நேற்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி மருத்துவமனைக்கு முன்பாக மக்களை திரட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றதாக சாவகச்சேரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவது, அண்மையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு புதிதாக வைத்திய அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப்பட்டதை தொடர்ந்து அவர் சில மருத்துவமனைகளில் நோயாளிகளின் நலன் கருதி சில அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

இதனையடுத்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள் நேற்று முன்தினம் தொடக்கம் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் மருத்துவமனைக்கு சிகிச்சை பெற செல்லுகின்ற நோயாளிகள் அனைவரும் திருப்பி அனுப்பப்படுகின்ற நிலை காணப்படுகின்றது.

இதனால் தென்மராட்சியின் பொது அமைப்புக்கள், நலன் விரும்பிகள், பொதுமக்கள் என அனைவரும் ஒன்றிணைந்து நேற்று முற்பகல் மருத்துவமனைக்கு வருகை தந்திருந்த மாகாண சுகாதார பணிப்பாளரை சந் தித்து நிர்வாக பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முதல் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் இல் லையேல் பொது மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பாரிய போராட்டத்தில் ஈடுபடுவோம் எனத் தெரிவிப்பதற்காக மருத்துவமனை முன்பாக குழுமி இருந்தனர்.

இதனையடுத்து அங்கு வருகை தந்த சாவகச்சேரி பொலிஸார் அங்கு குழுமி இருந்தவர்களை அகற்ற முற்பட்டனர். இதன்போது முன்னாள் நகரசபை உறுப்பினர் கிஷோரை அங்கிருந்த சாவகச்சேரி பொலிஸார் கைது செய்தனர்.

இதனை அடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய இணைப்பாளர் கனகராஜ்க்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து சாவகச்சேரி மருத்துவமனைக்கு உடனடியாக வருகை தந்த அவர் பொது மக்களோடும் மருத்துவமனை நிர்வாகத்தோடும் கலந்துரையாடினார்.

உடனடியாக கைதான நகரசபையின் முன்னாள் உறுப்பினர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் விடுதிகளில் தங்கி இருந்து சிகிச்சை பெற்றவர்கள் அனைவரும் வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டதோடு வீடுகளுக்கும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இதனால் மருத்துவமனை வெறிச்சோடிய நிலையில்காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30-33)

# பேக்கரி பொருட்களின் விலையைக் குறைக்க முடியாது

## பேக்கரி உரிமையாளர் சங்கம்



(கொழும்பு)

பாண் மற்றும் பேக்கரி பொருட்களின் விலையை குறைக்க முடியாது என பேக்கரி உரிமையாளர்கள் சங்க தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

எரிவாயுவின் விலையை குறைப்பதன் மூலம் உற்பத்திப் பொருட்களின் விலைகளை குறைக்க முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மூலப்பொருட்களின் விலை இன்னும் அதிகமாக இருப்பதே இதற்கு காரணம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# யாழ்.பிராந்தியத்திற்கு புதிய பொலிஸ் அத்தியட்சகர்

(யாழ்ப்பாணம்)



யாழ்.பொலிஸ் பிராந்தியத்திற்கு புதிய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார உத்தியோகபூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

யாழில் உள்ள சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று காலை 10 மணியளவில் இடம்பெற்ற சர்வமத தலைவர்களின் ஆசியுடன் நடைபெற்ற நிகழ்வில் புதிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் யாழ்.பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதுவரை யாழ்.பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சராக கடமையாற்றிய ஜகத் விசாந்த பிரதிப் பொலிஸ் மா அதிபராக பதவி உயர்வு பெற்று சென்றமையால் அவருடைய பதவிநிலைக்கு சூரிய பண்டார நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

# உலக உணவுத்திட்ட பிரதிநிதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி அப்துல் ரகீம் சித்திக் உத்தியோகபூர்வ விஜயமாக யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

இந்த விஜயத்தின் போது யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலக அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து உலக உணவுத் திட்டத்தின் "Food for Assets" செயற் றிட்டத்தின் விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் இடம் பெற்றது.

இக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 7 பிரதேச செயலாளர் பிரிவுகளில்(நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய்) " Food for Assets" செயற்றிட்டத்தினூடாக நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்களை செயற்படுத்தல் குறிப்பாக குளங்கள் கால்வாய்களை புனரமைத்தல் தொடர்பாகவும் செயற்றிட்டத்தின் முன்னேற்றங்கள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் உலக உணவு திட்ட அரசாங்க பங்குடமை அதிகாரி முஸ்தபா நிஹ்மத், உலக உணவுத்திட்ட பொறியியலாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கல-ந்து கொண்டனர். (நி-6-33)

# விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல் கலைக்கழகத்தின் யாழ்ப் பாணப்பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் முயற்சியாண்மை மற்றும் சிறு வணிக முகாமைத்துவ உயர்தரச் சான்றிதழ் 2023/ 2024 கற்கை நெறிக்கு விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 15.07. 2024 ஆம் திகதிக்கு முன்னர் இணையவழி ஊடாக (www.ou.ac.lk) அல்லது பிராந்திய அலுவலகம் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ்ப் பாணப் பிராந்திய நிலையத்துடன் (021-222 3374) தொடர்பு கொள்ளுமாறு யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# குடத்தனையில் யுக்திய

## 6 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் பொலிஸாரின் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையிலான பொலிஸார் குடத்தனை பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதன் போது , வாள் வெட்டு சம்பவம் , கசிப்பு உற்பத்தி உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-6-33)



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டு விழா கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய இழுவைமடிப்படகுகளால் இலங்கைக்கு 700 மில்லியன் இழப்பு

(கொழும்பு) —

**அத்துமீறிய இந்திய இழுவைமடி படகுகளினால் இலங்கைக்கு 700 மில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக மீன்பிடி அமைச்சு தெரிவித்துள்ளது.**

இந்திய மீனவர்கள் வடக்குக் கடற்பரப்பில் மீண்டும் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுவரும் நிலையில், அத்து மீறிய மீன்பிடிக்காக கடந்த இரண்டு வாரங்களில் 50இற்கும் மேற்பட்ட மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் படகு மோதி ஸ்ரீலங்கா கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததையடுத்து இந்த விடயங்கள் இரு நாடுகளுக்கும் இடையில் பூதாகரமான விடயங்களாக மாற்றம் பெற்றுள்ள நிலையிலேயே, அத்துமீறிய மீன்பிடி தொடர்பான பாதிப்புகளை இந்திய அரசாங்கத்துக்கு இலங்கை தெளிவுபடுத்தியுள்ளது.

இது தொடர்பான மேலும் சில விடயங்கள் இந்திய வெளி விவகார அமைச்சர் ஜெய்சங்கரின் கவனத்துக்குக்கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் மீன்பிடி அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-6)


## நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்
### விண்ணப்பம் கோரல்

கோவிலின் கீழ் வரும் பதவிகளுக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. தகுதி உடையவர்கள் 15.07.2024 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை செயலாளர் அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் நயினாதீவு எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பதவி**

1. கணக்காளர்
2. நிறைவேற்று அலுவலர்

**பொதுவான தகைமைகள் :**

1. இந்து சமயத்தவராக இருத்தல் வேண்டும்.
2. 25 வயதிற்கு மேற்பட்டவராகவும் 65 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்
3. ஆண் / பெண் இருபாலரும் விண்ணப்பிக்க முடியும்

**கணக்காளர்**

- பல்கலைக்கழகத்தில் கணக்கியல் தொடர்பாகப் பெற்ற பட்டம் அதற்கு சமமான பட்டம்
- கணக்காளர் சேவை மற்றும் அதனோடு இணைந்த சேவைத் தகைமைகள்

**நிறைவேற்று அலுவலர்**

- பல்கலைக்கழக பட்டம் அதற்கு சமமான பட்டம்
- பதவி நிலைத்தர பதவி வகித்து ஓய்வு பெற்றவர்கள்

விண்ணப்பத்துடன் தகைமைச் சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்பட வேண்டும். நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள், சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(சி-742)

செயலாளர், அறங்காவலர் சபை,
நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்


# பதுளையில் விபத்து நால்வர் உயிரிழப்பு



(பதுளை)

பதுளை - சொரனாதோட்டை வீதியில் வெலிஹிந்த பிரதே சத்தில் நேற்று பாரவூர்தியொன்று விபத்துள்ளாகியதில் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்

மொனராகலையில் இருந்து வீதிகளில் பேருந்து தரிப்பிடங்களை அமைப்பதற்காக வந்தவர்களே இவ்வாறு விபத்தில் சிக்கியுள்ளனர். (நி-6)


## லங்கா மஹறால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974 (1375)



## மணிவிழா வாழ்த்து

திருமதி. விமலகாந்தி (B.SC, Dip in Ed ,SLTS-I)
அற்புதச்சந்திரன்

- வ/இந்துக் கல்லூரி 1995(பகுதி நேர ஆங்கில ஆசிரியர்)
- வ/செட்டிக்குளம் மகா வித்தி. 1998.07.30-16.01.2000
- யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் 17.01.2000-19.06.2003
- யா/நல்லூர் இந்து மகளிர் பெண்கள் பாடசாலை 20.06.2003-30.09.2004
- யா/திருக்குடும்ப கன்னியர்மடம் 01.10.2004-15.04.2006
- யா/ஒஸ்மானியா கல்லூரி 16.04.2006-09.11.2008
- யா/புனித றோக்ஸ் றோ.க.வித்தி 10.11.2008-26.01.2016
- யா/புனித சென் ஜேம்ஸ் மகா. வித்தி 27.01.2016-இன்று வரை




2024.07.06 இன்று ஓய்வு பெற்று மணிவிழாக் காணும் ஆசிரியர் திருமதி. விமலகாந்தி அற்புதச்சந்திரன் அவர்களின் ஓய்வுக்காலம் சீரும் சிறப்போடும் அமைய இறையருளை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/சென் ஜேம்ஸ் மகா.வித்தியாலயம்.



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1991- இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில் : Chemical Engineer<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/14630 | பிறப்பு-1999-இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>கி.பா:40<br>7 இல் செவ்<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்: Beautician<br>எதிர்பார்ப்பு: Canada,London,Swiss<br>தொ.இ: G/14643 |
| பிறப்பு:1997- இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா:69<br>7 இல் செவ்<br>உயரம் :5'8"<br>தகைமை/ தொழில்:Engineer<br>எதிர்பார்ப்பு:BSC பட்டதாரி, Engineer,Doctor<br>தொ.இ: B/14631 | பிறப்பு-1994- இந்து<br>நட்சத்திரம்:மூலம்<br>கி.பா:17<br>4 இல் செவ்<br>உயரம் : 5'6"<br>தகைமை/ தொழில்: Bsc பட்டதாரி, முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி<br>தொ.இ: G/14644 |
| பிறப்பு:1993- இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>உயரம் :5'1"<br>தகைமை/ தொழில்:QS(Canada)<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம்<br>தொ.இ: B/14632 | பிறப்பு-1999-இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>கி.பா:36 3/4<br>உயரம் :5'7"<br>தகைமை/தொழில்: Hospitality Management HND<br>எதிர்பார்ப்பு:உத்தியோகம், வெளிநாடு<br>தொ.இ: G/14645 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியன்-2
# ஸ்கைவ் டைவிங் மூலம் டுபாயில் விளம்பரம்
## அசத்தியது படக்குழு



(டுபாய்)

லைக்கா புரொடக்ஷனின் பிரம்மாண்ட தயாரிப்பில், இயக்குநர் ஷங்கரின் இயக்கத்தில், கமல்ஹாசன் நடித்துள்ள இந்தியன் 2 திரைப்படத்தின் விளம்பரப் பணிகள் விறுவிறுப்பாக உலகமெங்கும் நடைபெற்று வரும் நிலையில் டுபாயில் ஸ்கை டைவிங் மூலம் படத்திற்கான விளம்பரம் செய்து, அனைவரையும் படக்குழு வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

லைக்கா புரொடக்ஷனின் ஸ்தாபகத் தலைவர் அல்லிராஜா சுபாஷ்கரனின் பிரம்மாண்டத் தயாரிப்பில், இயக்குநர் ஷங்கரின் இயக்கத்தில் உலக நாயகன் கமல்ஹாசன், சித்தார்த், எஸ்.ஜே.சூரியா, காஜல் அகர்வால், ரகுல் பீரித்சிங், சமுத்திரகனி, விவேக், பாபி சிம்ஹா, பிரியா பவானி ஷங்கர் உள்ளிட்ட பலர் நடித்துள்ள இந்தியன் 2 திரைப்படம் எதிர்வரும் 12 ஆம் திகதி உலகமெங்கும் வெளியாகவுள்ளது.

இந்தத் திரைப்படத்திற்கு ரவிவர்மன் ஒளிப்பதிவு செய்துள்ள நிலையில், முத்துராஜ் கலைவடிவமைப்பை மேற்கொண்டுள்ளார்.

மேலும், இயக்குநர் ஷங்கருடன் முதன்முறையாக இசையமைப்பாளர் அனிருத் மற்றும் படத்தொகுப்பாளர் ஸ்ரீகர் பிரசாத் ஆகியோர் இந்தியன் 2 மூலம் கூட்டணி அமைத்துள்ளார்கள்.

இந்தத் திரைப்படத்தின் பாடல்கள் மற்றும் ட்ரெய்லர் என்பன ஏற்கனவே வெளியாகி, ரசிகர்களிடத்தில் பெரும் வரவேற்பை பெற்று வரும் நிலையில், படக்குழுவினர் தற்போது படத்திற்கான விளம்பரப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில், டுபாயில் ஸ்கை டைவிங் மூலம் படத்தினை விளம்பரம் செய்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது இந்தியன் 2 படக்குழு.

இதுதொடர்பான காணொளிகள் சமூக ஊடகங்களில் வெளியாகி, வைரலாகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# 14 ஆண்



பிரிட்டன் பொதுத் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. மொத்தம் 4.6 கோடி பேர் வாக் களித்த இத்தேர்தலுக்காக 40

## 6 நாட்களுக்கு பாகிஸ்தானில் சமூகவலைத்தளங்களுக்கு தடை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அரசாங்கம் சமூக வலைத்தளங்களுக்கு 6 நாட்கள் தடை விதிக்க உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த தடை ஜூலை 13 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை ஒரு வாரத்திற்கு விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பெரும்பாலான பாகிஸ்தான் மக்கள் வாட்ஸ்அப் பேஸ்புக், டிக்டொக், இன்ஸ்டாகிராம், யூடியூப், எக்ஸ் போன்ற சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி வருகின்ற நிலையில் இந்த அறிவித்தல் வெளியாகி உள்ளது.

முகரம் பண்டிகையை முன்னிட்டு ஜூலை 13 ஆம் திகதி முதல் ஜூலை 18 ஆம் திகதி வரை பஞ்சாப் மாகாணத்தில் தடை விதிக்க வேண்டும் அம் மாகாண முதல்வர் மரியம் நவாஸின் சட்டம் ஒழுங்கிற்கான அமைச்சரவை குழு பரிந்துரை செய்துள்ளது.

வெறுப்பு பேச்சு, வன்முறை போன்ற சம்பவங்களை தவிர்க்க இந்த நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாக பஞ்சாப் அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

பஞ்சாப் அரசு ஷெபாஸ் ஷெரீப் தலைமையிலான மத்திய அரசுக்கு இது தொடர்பாக வேண்டுகோள் விடுத்துள்ளது. மத்திய அரசு தடை விதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் முடிவுகள் மாற்றப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில் எக்ஸ் தளம் முடக்கப்பட்டது.

ஏப்ரல் 2022 இல் நம்பிக்கையில்லா தீர்மானம் மூலம் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் வெளியேற்றப்பட்டதில் இருந்து இராணுவம் மற்றும் அரசாங்கம் சமூக ஊடகங்களில் கடும் விமர்சனங்களை எதிர்கொண்டன என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## அட்லாண்டிக்கில் கவிழ்ந்தது குடியேற்றவாசிகளின் படகு
## 89 பேரின் உடல்கள் மீட்பு



(அட்லாண்டிக்)

அட்லாண்டிக் சமுத்திரத்திலிருந்து 89 குடியேற்றவாசிகளின் உடல்களை மீட்டுள்ளதாக மொரெட்டேனியாவின் கரையோர காவல்படையினர் தெரிவித்துள்ளனர்.

ஐந்து வயது சிறுமி உட்பட 9 பேரை உயிருடன் மீட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர்கள் ஆனால் பலர் உயிரிழந்துள்ளனர் என குறிப்பிட்டுள்ளனர்.

செனெகல் கம்பியா எல்லையிலிருந்து 170 பேருடன் படகொன்று பயணம் புறப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அதிகாரிகள் மொரெட்டேனியாவின் தென்மேற்கு கடலோரப்பகுதியில் படகு கவிழ்ந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.


மேற்கு ஆபிரிக்காவிலிருந்து ஐரோப்பா செல்ல முயலும் குடியேற்ற வாசிகளிற்கான பிரதான இடைத்தங்கல் நாடாக மொரெட்டேனியா காணப்படுகின்றது. ஆயிரக்கணக்கான படகுகள் குடியேற்றவாசிகளுடன் இங்கிருந்து புறப்படுவது வழமை.

ஆபத்தான இந்த பாதையில் பயணிக்கும் படகுகள் ஸ்பெயினின் கனரி தீவுகளை நோக்கி செல்கின்றன - கடந்த வருடம் இந்த தீவிற்கு 40,000 இற்கும் அதிகமானவர்கள் வந்து சேர்ந்தனர் என தெரிவிக்கும் ஸ்பெயின் அரசாங்கம் இது முன்னைய ஆண்டை விட அதிகம் என குறிப்பிட்டுள்ளது.

ஐரோப்பாவிற்கு செல்ல முயலும் குடியேற்வாசிகள் அளவுக்கதிகமானவர்கள் ஏற்றப்பட்ட படகுகளில் ஆபத்தான பயணங்களை மேற்கொள்கின்றனர்.

2024 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஸ்பெயினை சென்றடைய முயன்ற 4000இற்கும் அதிகமானவர்கள் கடலில் உயிரிழந்துள்ளனர் என ஸ்பெயின் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (நி-6)

## மலேசியா சர்வதேச விமான நிலையத்தில்
# எரிவாயு கசிவு-39 பேர் பாதிப்பு



(கோலாலம்பூர்)

மலேசியா - கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தில் எரிவாயு கசிவு ஏற்பட்டு 39 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இதனை சுவாசித்தவர்களிடம் தலைச்சுற்றல், குமட்டல், வாந்தி போன்ற அறிகுறிகள் காணப்பட்டதாகவும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 39 பேரில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விமான பயணங்களுக்கு வந்த பயணிகள் யாரும் இதில் பாதிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

மேலும் எரிவாயு கசிவு ஏற்பட்ட உடனேயே தீயணைப்பு குழுக்கள் விமான நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...ண்டுகளின் பின் ஆட்சி மாற்றம்

## ❖ ரிஷி சுனக் அதிர்ச்சித் தோல்வி
## ❖ பிரிட்டனின் புதிய பிரதமராகிறார் கெய்ர் ஸ்டார்மர்

(லண்டன்)

**பிரிட்டனில் பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியை வீழ்த்தி, கெய்ர் ஸ்டார்மர் தலைமையிலான தொழிலாளர் கட்சி ஆட்சியை கைப்பற்றியுள்ளது.**

ஆயிரம் வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்பட்டன. இந்தத் தேர்தல் வாக்குச் சீட்டு முறையில் நடத்தப் பட்டது.

இத்தேர்தலில் ஆளும் கட்சியான, பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சிக்கும், கெய்ர் ஸ்டார்மர் தலைமையிலான தொழிலாளர் கட்சிக்கும் இடையே போட்டி நிலவியது.

வாக்குப்பதிவு முடிவடைந்ததுமே வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. பிரிட்டன் நாடாளுமன்ற கீழவையில் மொத்தம் உள்ள 650 இடங்களில் பெரும்பான்மைக்கு 326 இடங்கள் தேவை.

ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் வெளியேறிய பின்னர் நடத்தப்பட்ட முதல் பொதுத்தேர்தல் இது வாகும்.

இந்த நிலையில் இது வரையில் வெளியாகியுள்ள உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளின் படி தொழி லாளர் கட்சி 412 ஆசனங்களையும், ஆட்சியில் இருந்த கன்சர்வேட்டிவ் கட்சி 120 ஆசனங்களையும் வென்றுள்ளன.


ஆட்சியைக் கைப்பற்றிய வெற்றி மகிழ்ச்சியில் கெய்ர் ஸ்டார்மர் உரையாற்றுகையில் "நாம் அதை செய்தோம்... மாற்றம் இப்போது தொடங்குகிறது" என குறிப்பிட்டார்.

இதேபோல், பிரதமர் ரிஷி சுனக் கூறுகையில், "கன்சர்வேட்டிவ் கட்சியின் தோல்விக்கு நான் பொறுப்பேற்கிறேன்.

வெற்றி பெற்ற தொழிலாளர் கட்சிக்கு வாழ்த்துகள்" எனத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் கடந்த 14 ஆண்டுகளாக கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சி நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# 200 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை இஸ்ரேல் மீது ஏவிய ஹிஸ்புல்லா



(ஜெருசலேம்)

இஸ்ரேல் காசா மீது தாக்குதல் நடத்துவதற்கு லெபனான் நாட்டில் செயற்பட்டு வரும் ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இஸ்ரேலும் ஹிஸ்புல்லா அமைப்பினரை குறிவைத்து வான்தாக்குதல் நடத்தி வருகிறது.

நேற்று முன்தினம் தெற்கு லெபனானில் ஹிஸ்புல்லாவின் மூன்று பிராந்தியங்களில் ஒன்றிற்கு தலைமை ஏற்ற முகமது நாமேஹ் நாசர் இஸ்ரேல் தாக்குதலால் கொல்லப்பட்டார்.

இந்த நிலையில் அதற்கு பதிலடியாக இஸ்ரேல் உள்ள பல இராணுவத் தளங்களை குறிவைத்து ஹிஸ்புல்லா 200 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை செலுத்தி தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்த தாக்குதல் இஸ்ரேல் மீது இதுவரை இல்லாத அளவிற்கு நடத்தப்பட்ட தாக்குதல் எனக் கருதப்படுகிறது.

இஸ்ரேல் எல்லைக்குள் நுழைந்த ஏராளமான ஏவுகணைகள் மற்றும் வான்வழி இலக்குகளை இடைமறிக்கப்பட்டது. இது தொடர்பாக உயிரிழப்பு ஏதும் ஏற்பட்டதா? என்பது குறித்து உடனடி தகவல் ஏதும் இல்லை என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

கடுமையான வெடி பொருட்கள் நிரப்பிய கட்யுஷா ரொக்கெட்டுகள், பலாக் ரொக்கெட்டுகள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளது.

அத்துடன் பல்வேறு தளங்களை குறிவைத்து வெடிக்கும் ட்ரோன்களையும் செலுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் வியாக்கிழமையும் ரொக்கெட்டுகள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளது.

லெபனான் ஹிஸ்புல்லா-இஸ்ரேல் இராணுவம் இடையே மோதல் ஏற்பட்டுள்ள நிலையில் இரு பக்க எல்லைகளில் இருந்து சுமார் 10 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

வடக்கு இஸ்ரேலில் 16 வீரர்கள், 11 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். லெபனானில் 450 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதில் அதிகமானோர் ஹிஸ்புல்லா அமைப்பைச் சேர்ந்தவர்கள். டசின் கணக்கில் பொதுமக்களும் உயிரிழந்துள்ளனர். (நி)

### கனடா வரலாற்றில் முதல் முறையாக
# பெண் இராணுவ தளபதி



(ஒட்டாவா)

கனடாவின் இராணுவ தளபதியாக இருந்து வரும் வெய்ன் அயர் விரைவில் ஓய்வு பெற உள்ளார். இதையொட்டி புதிய இராணுவத் தளபதியாக மூத்த பெண் இராணுவ அதிகாரியான ஜென்னி கரிக்னன் என்பவரை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நியமித்துள்ளார்.

இதன் மூலம் கனடா வரலாற்றில் இராணுவ தளபதியாகும் முதல் பெண் என்கிற பெருமையை ஜென்னி கரிக்னன் பெற்றுள்ளார்.

தற்போது ஆயுத படைகளின் தொழில்சார் நடத்தை மற்றும் கலாசாரத்தின் தலைவராக உள்ள ஜென்னி கரிக்னன் கடந்த 35 ஆண்டுகளாக இராணுவத்தில் சேவை புரிந்து வருகிறார்.

2008 ஆம் ஆண்டில், கனடா ஆயுத படைகளின் வரலாற்றில் ஒரு போர் படை பிரிவுக்கு தலைமை தாங்கிய முதல் பெண் என்ற பெருமையை பெற்றார்.

அதைத்தொடர்ந்து, ஆப்கானிஸ்தான் மற்றும் சிரியாவில் கனடா படைகளை வழிநடத்திய ஜென்னி கரிக்னன், 2019 முதல் 2020 ஆம் ஆண்டு வரை, "நேட்டோ மிஷன் ஈராக்" கை வழிநடத்தினார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் பதவிக்காலம்; விரைவில் புதிய சட்டமூலம்

(கொழும்பு)

19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பான குழப்பநிலை காணப்படுவதாகவும் அதனை ஆராயும் நோக்கில் அமைச்சரவையில் யோசனை ஒன்றை ஜனாதிபதி முன்வைத்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி அறிவித்துள்ளது.

நேற்று மதவாச்சியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பாக ஒரு இடத்தில் 5 ஆண்டுகள் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போன்று 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் மற்றுமொரு இடத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் தற்போது குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை அமைச்சரவையில் இது தொடர்பான யோசனை ஒன்றை ஜனாதிபதி முன் வைத்துள்ளார்.

விரைவில் இந்த விடயம் தொடர்பான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வருவதற்கும் எதிர்பார்த்துள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் நேற்று இல.81 பிறவுண்வீதி யாழிலில் உள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகியது. தொடர்ந்து சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் வி.கே உஷா வழங்கவுள்ளார்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.(நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 320 | 300 | 200 | 250-300 |
| உருளைக்கிழங்கு | 200 | 240 | 220 | 240 | 220 |
| பச்சைமிளகாய் | 200 | 170 | 160 | 200 | 150 |
| தக்காளி | 400 | 550 | 550 | 400 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 150 | 200 | 120-140 |
| கோவா | 300 | 300 | 300 | 300 | 250 |
| கரட் | 400 | 550 | 600 | 600 | 400 |
| பூசணி | 120 | 200 | 200 | 200 | 150 |
| புடோல் | 120 | 300 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 160 | 200 | 200 | 200 | 150-200 |
| சின்ன வெங்காயம் | 350 | 450 | 250 | 400 | 300-500 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 350 | 240 | 240 |
| பாகற்காய் | 800 | 800 | 1200 | 1000 | 800 |
| வெண்டக்காய் | 150 | 250 | 200 | 320 | 250 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 200 | 200 | 150 |
| பயற்றங்காய் | 350 | 250 | 250 | 350 | 300-400 |
| லீக்ஸ் | 520 | 500 | 600 | 600 | 350 |
| பீற்றூட் | 200 | -- | 700 | 600 | 500 |
| கறிமிளகாய் | 600 | 700 | 750 | 800 | 400 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 700 | 800 | 400-550 |
| போஞ்சி | 600 | 700 | 700 | 800 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | -- | 200 | 50 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 50 | 80 | -- |
| தேசிக்காய் | 800 | 800 | 800 | 90 | 600-650 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80-120 | 80-120 | 60-110 |
| இராசவள்ளி | 350 | 450 | 500 | 500 | 300 |
| வெங்காயப்பூ | 350 | 400 | 400 | 400 | -- |
| முள்ளங்கி | 140 | 150 | 200 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 120 | 60 | 100 |
| வல்லாரை | 60 | 30 | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | 80 | 160 | 80 | 100 | 100 |

# இன்று ஒரு தகவல் 174



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# குதிரை

குதிரைக்கும் கழுதைக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டார் ஒருத்தர். குதித்து ஓடத்தெரிந்தால் அது குதிரை. கனைத்துக்கொண்டு சுமக்கத் தெரிந்தால் அது கழுதை என்று வேடிக்கையாக விளக்கம் கொடுத்தார் இன்னொருவர். இந்த உலகத்திலே சுமப்பதற்கு என்று பிறந்தது கழுதை. ஓடுவதற்கு என்று பிறந்தது குதிரை. அடுத்தவன் முதுகிலே சவாரி செய்வதற்கு பிறந்தவன் மனிதன். அதனாலே தான் குதிரை முதுகிலே ஏறி உட்கார்ந்து கொள்கிறான். அதுமட்டுமில்லை அது அங்கேயும் இங்கேயும் பார்க்காமல் வேகமாக ஓட வேண்டும் என்பதற்காக அதற்கு கண்ணடக்கம் எல்லாம் மாட்டி விட்டுவிடுகின்றான்.

குதிரையோட கண் இருக்கிறதே அது கொஞ்சம் வித்தியாசமானது. ஆட்டிற்கும் மாட்டிற்கும் இருக்கின்ற மாதிரி இல்லை. குதிரைக்கு தலையிலே கண் பக்கவாட்டிலே இருக்கும். இதனாலே அதற்கு இரண்டு ஒற்றைக்கண் பார்வை கிடைக்கிறதாம். அது ஒரே சமயத்திலே தன்னுடைய இரண்டு பக்கவாட்டுத்திசையிலும் பார்க்க முடியுமாம். அது மட்டுமில்லை தனக்குப் பின்னாலே என்ன நடக்கின்றது என்பதனையும் அதனாலே பார்க்க முடியுமாம். எங்களுக்கும் அது மாதிரி பார்க்க முடிந்தால் சௌகரியமாக இருக்கும். அதோடு உடம்பாலே மறைக்கப்படுகின்ற பின் பகுதியை மட்டும் தான் அதனால் பார்க்க முடிவதில்லை.

தனக்கு முன்னால் உள்ள பொருளை இரண்டு கண்களினாலே பார்க்கின்றபோது கண்களை முன் பக்கம் திருப்பி பார்வையை குவியப்படுத்தும். அப்போது அதற்கு பக்கவாட்டுப் பார்வையும் பின்புறப்பார்வையும் மறைந்து விடும். அப்படி அது இரண்டு கண் பார்வையையும் குவித்து பார்க்கின்றபோது அதனுடைய கண்கள் சுமார் 1.2மீற்றருக்கு குறைவான தொலைவிலே இருக்கின்ற பொருட்களை குவியப்படுத்த முடியுதாம். அதனாலே தான் சாப்பிடுகின்ற இரையைக்கூட பார்க்கிறதே இல்லையாம். வேடிக்கையாகத்தான் இருக்கிறது.

நாம் கூட பல சமயங்களிலே அவசரமாக சாப்பிடுகின்றபோது சாப்பிடுவது என்ன என்பதனை கவனித்தா சாப்பிடுகின்றோம்? சாப்பிடுவது என்ன என்பது கைக்கும் வாய்க்கும் தான் வெளிச்சம். குதிரைக்கும் நமக்கும் இப்படி ஒரு ஒற்றுமை. குதிரையை வண்டியிலே கட்டுகின்ற போது சவாரி செய்கின்ற போது எல்லாம் அதனுடைய கண்ணிற்கு கண்ணடக்கம் என்று சொல்லி திரைபோட்டு மறைத்துவிடுவது எதற்கு என்றால் அப்போது தான் அது போகின்ற திசையிலே மட்டும் கவனத்தை வைத்துக்கொண்டு ஓடும். பக்கத்திலேயும் பின்னாலேயும் என்ன நடக்கின்றது என்பது அதற்கு தெரியாது.

குதிரை பந்தயத்திலே தடை தாண்டுகின்ற போட்டி பார்த்திருக்கின்றீர்களா? நடுவிலே வைத்திருக்கின்ற தடைகளை தாண்டித் தாண்டிக்குதிரை ஓடும். அந்த சமயத்திலே எல்லாம் அது தரையையோ தடையையோ பார்க்க முடியதாம். ஏதோ ஒரு குருட்டாம் போக்கிலே தான் தாண்டுமாம். ஆனால் ஒரு விடயம். எந்த நேரத்திலே கால்களைத்தூக்கி எழும்ப வேண்டும் என்பதனை குதிரை மேலே உட்கார்ந்திருக்கின்றவர் சைகைகள் மூலமாக தெரிவிக்கின்றார். அதைப் புரிந்து கொண்டு அது தாண்டுகின்றது அவ்வளவும்தான். அவர் தவறுதலாக ஏதாவது சைகை காட்டிவிட்டால் கீழே விழ வேண்டியது தான்.

குதிரையின் கண்களை விட உயர்ந்த மட்டத்திலே இருக்கின்ற பொருளையும் அதனாலே தெளிவாகப் பார்க்க முடியாது. மிகவும் தூரத்திலே உள்ள பொருளையும் விவரமாகப் பார்க்க முடியாது. அது மட்டுமில்லை நிறங்களையும் அதனாலே கண்டுபிடிக்க முடியாது. சரி இப்படி எல்லாம் இருந்தும் குதிரை எப்படி சமாளிக்கிறது? இதற்கு கை கொடுக்கிறது அதனுடைய கழுத்து. அதற்கு நீளமான கழுத்து. அதனுடைய உதவியாலே தலையை அப்பப்போது தகுந்த நிலைக்கு மாற்றி திருப்பி தன்னுடைய கண்களிலே பொருள் தெளிவாக தெரிகின்ற மாதிரி செய்கின்றது.

கண்ணிலே விழித்திரை என்ற ஒன்று இருக்கும் தானே. அது மற்ற விலங்குகளுக்கு குழிவாக இருக்கும். குதிரைக்கு தட்டையாக இருக்கும். அதனாலே தான் தலையைத் திருப்பி விம்பம் விழுகின்ற மாதிரி செய்து கொள்ள முடியுதாம். ஒரு நல்ல தரமான குதிரை எப்படி இருக்க வேண்டும்? நெற்றி குறுகலாக இருக்க வேண்டும். இரண்டு பக்கமும் கண் சமமாக சரியாக இருக்க வேண்டும். இப்படி இருந்தால் அந்தக்குதிரை தன்னுடைய தலைக்கு முன்னாலே இருப்பதை தெளிவாகப் பார்க்கமுடியும். அது தான் உயர் தரமான குதிரை. குதிரைக்கு பழக்கமும் பயிற்சியும் மிகவும் முக்கியம்.

ஒருவர் ஒரு குதிரைக்கு பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார். அந்த குதிரை முன்னாலே நின்றுகொண்டிருந்தது. அவர் பின்னாலே கொஞ்சத்தூரத்திலே இருந்து வேகமாக ஓடிவந்து ஒரு ஜம்ப் பண்ணுவார். அப்படியே உயர ஆகாயத்திலே எழும்பிக் குதிரை முதுகிலே போய் உட்காருவார். அதே விநாடி அந்தக் குதிரை பாய்ந்து ஓட ஆரம்பித்து விடும். அப்படி ஒரு பயிற்சி. இதைப்பார்த்த பெரியவர் அப்படி வேகமாக குதிரை முதுகிலே போய் விழுந்தால் குதிரையோட இடுப்பு என்னத்திற்கு ஆகும் உடைந்து விடாதா ? என்றார். அவர் அதையெல்லாம் காதிலே வாங்கிக்கொள்ளவில்லை. கொஞ்ச நாள் கழித்து பயிற்சி கொடுத்தவர் அந்த பெரியவரை மறுபடியும் பார்த்தார். ஐயா நீங்கள் சொன்னது போலவே இடுப்பு உடைந்து போய்விட்டது என்றார். குதிரைக்கா என்றார் அவர். இல்லை எனக்கு என்றார் இவர். பார்த்தால் இடுப்பு வளைந்து போய் இருக்கின்றது. எப்படி என்றார் இவர்.

குதிரைக்கு பயிற்சி எல்லாம் நன்றாகத்தான் கொடுத்தேன். அது முடிந்த பிறகு ஒரு தடவை நான் வழக்கம் போல பின்னாலே இருந்து ஓடி வந்து ஸ்டைலா பாய்ந்து ஆகாயத்திலே எழும்பி குதிரைமுதுகிலே உட்காரப் போனேன். நான் உட்காருவதற்கு முன்பு குதிரை ஓட ஆரம்பித்து விட்டது. தரையிலே உட்கார்ந்து விட்டேன். அது தான் இப்படி ஆகிவிட்டது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி தெற்கு வலயத்தின் புதிய கல்விப் பணிப்பாளர்



(அக்கராயன்)

கிளிநொச்சி தெற்கு வலயத்தின் புதிய கல்விப் பணிப்பாளராக கஜபதி காயத்திரி கடந்த புதன் கிழமை பணிகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் மூன்று மாதங்களுக்கு முன்னர் தென் மராட்சி வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற நிலையில் கிளிநொச்சி தெற்கு பதில் வலயக் கல்விப் பணிப்பாளராக கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் பணியாற்றிய நிலையில் கிளிநொச்சி தெற்கின் நிரந்தர கல்விப் பணிப்பாளராக கஜபதிகாயத்திரி நியமிக்கப்பட்டுள்ளார். (நி-6-350)

# சட்டவிரோத காடழிப்பால் வளங்கள் அழிவடையும் அபாயம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு புத்து வெட்டுவானில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத காடழிப்பு சம்பவங்களை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புத்துவெட்டுவான் மருதங்குள, வேப்பங்குள பகுதிகளிலே இக் காடழிப்பு சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றது. அதேவேளை சட்டவிரோதமாக 10 ஏக்கர் வரையான காடுகள் வெட்டப்பட்டுள்ளன. குறித்த செயற்பாடுகளால் இயற்கையான வளங்கள் அழிவடைந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

சட்டவிரோத காடழிப்பு செயற்பாடுகளை தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(நி-6-350)

# கல்லாறு பகுதியில் விசேட சுற்றிவளைப்பு

- ஐஸ் போதை, மோ.சைக்கிள் மீட்பு
- 10 பேர் கைது

(தருமபுரம்)


தருமபுரம் பொலிஸ் பிரிவில் உள்ள கல்லாறு பகுதியில் நேற்று விசேட யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

குறித்த நடவடிக்கையில் பொலிஸார், இராணுவத்தினர் சிறப்பு அதிரடிப்படையினர் இணைந்து மேற்கொண்டனர். இதன் போது பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பல சந்தேகநபர்கள் கைது செய்யப் பட்டனர்.

இதன் போது ஐஸ் போதைப்பொருள் ,மோட்டார் சைக்கிள் ஒன்று மீட்கப்பட்டுள்ளதுடன் 10 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களை பொலிஸ் விசாரனைகளின் பின்னர் நீதி மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத் துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-316)

# இடநெருக்கடி காரணமாக மரநிழலில் கற்றல் நடவடிக்கை



(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமப்புற பாடசாலைகளில் காணப்படுகின்ற இட நெருக்கடி காரணமாக பல வகுப்பறைகள் மரநிழலின் கீழ் நடத்தப்படுகின்ற நிலைமை காணப்படுகின் றது. 2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் பல பாடசா லைகளில் புதிய கட்டடங்கள் உருவாக் கப்பட்டிருந்தாலும் கிராமப் புற பாடசாலைகளிலே இட நெருக்கடி, தளபாட நெருக்கடி காணப்படுகின்றது. குறிப்பாக மனையியல், சங்கீத வகுப்புகளுக்கான தனி வகுப் பறைகள் இல்லாததன் காரண மாக மாணவர்கள் இப் பாடங்களை பயில்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். குறைந்தது ஒரு பாடசாலையில் ஒரு வகுப்ப றையாவது மரநிழலில் மாணவர்கள் பயில வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. (நி-6-350)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3160

திலக்ஷி





பவி





அபிநயன்




வானதி




விதுசன்




நதுஷா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

526





அது போனால் போகட்டும். அவ்வளவு பெரிய மனிதர்கள் வந்திருக்கும்போது நான் என் வீட்டுக்குப் போக விரும்பவில்லை. கையிலே வைத்திருக்கும் பிரஸாதத்தை என்னிடம் கொடுத்துவிட்டுப் போங்கள். நான் இங்கேயே சாப்பிட்டுவிட்டுக் கோவிலிலேயே இருந்து விடுகிறேன்."

"நீ ஒரு தனிப்பிறவிதான், பூங்குழலி! பெரிய மனிதர்கள் வந்தால் எல்லோரும் அவர்களைப் போய்ப் பார்க்கவும், பழக்கம் செய்து கொள்ளவும் விரும்புவார்கள். உனக்கு வேற்று மனிதர்களையே பிடிப்பதில்லை. அதிலும் பெரிய மனிதர்கள் என்றால் ஒரே பயம். பெரிய மனிதர்கள் என்றால் உன்னைக் கடித்து விழுங்கி விடுவார்களா? எதற்காக இந்தக் காட்டில் தனியாக இருக்க வேண்டும்?"

குருக்களய்யா! பிரஸாதத்தைக் கொடுக்க உங்களுக்கு இஷ்டமில்லாவிடில் வேண்டாம். என்னை வீணில் திட்டாதீர்கள்!

சிவ சிவா! உன்னை ஏன் நான் திட்டுகிறேன்? இந்தப் பிரஸாதம் உன் பசிக்குப் போதாதே என்று பார்த்தேன். தாராளமாய் வாங்கிக்கொள்!" என்று அர்ச்சகர் துணியில் கட்டிவைத்திருந்த சுவாமிப் பிரஸாதத்தைக் கொடுத்தார்.

மூட்டையை வாங்கிப் பூங்குழலி பிரித்துப் பார்த்துவிட்டு, "என் பசிக்கு இது போதாதுதான்! அவ்வளவு பெரிய சுவாமிக்கு இவ்வளவு குறைவாக நைவேத்தியம் வைக்கிறீர்களே! இது நியாயமா, சுவாமி! போனால் போகட்டும் அந்தக் கெண்டியில் என்ன இருக்கிறது? குடிக்கிற ஜலமா?"

"இல்லை, சுவாமிக்கு அபிஷேகம் செய்த பால்! குழந்தைக்காக எடுத்துக்கொண்டு போகிறேன்."

"இன்றைக்கு நானே உங்கள் குழந்தையாயிருக்கிறேன். அதையும் கொடுத்து விட்டுப் போங்கள் உங்களுக்குப் புண்ணியம் உண்டு."

"நல்ல பெண் அம்மா, நீ! போகட்டும், கெண்டியையாவது பத்திரமாய் வைத்திரு!"

இவ்விதம் சொல்லிக் குருக்கள் கெண்டியையும் பூங்குழலியிடம் கொடுத்தார்.

அச்சமயம் தூரத்தில் எங்கிருந்தோ ஆந்தையின் குரல் கேட்டது.

பூங்குழலி சிறிது திகைத்து, "ஐயா! அது என்ன சப்தம்?" என்று கேட்டாள்.

"தெரியவில்லையா, அம்மா! கோட்டான் கூவுகிறது. இந்தக் கோடிக்கரைக் காட்டில் கோட்டானுக்கா பஞ்சம்!" என்று சொன்னார் குருக்கள். மறுபடியும் அந்தக் குரல் கேட்டது.

"ஆமாம் கோட்டான் குரல் மாதிரிதான் இருக்கிறது!" என்றாள் பூங்குழலி.

"உன்னை ஒரு கோட்டானும் ஒன்றும் செய்யாது. கோயில் பிரகாரக் கதவைத் தாளிட்டுக் கொண்டு படுத்துக்கொள், அம்மா!" என்று சொல்லிவிட்டுக் குருக்கள் நடையைக் கட்டினார்.

குருக்கள் மறைந்ததும், பூங்குழலியும் புறப்பட்டாள். பிரஸாதத்தை மடியில் கட்டிக்கொண்டு, கெண்டியைக் கையில் எடுத்துக்கொண்டு கிளம்பினாள்.

கோட்டானின் குரல் கேட்ட திசையை நோக்கிச் சென்றாள். கொஞ்ச தூரம் போனதும், ஒரு குறுகிய வாய்க்கால் குறுக்கிட்டது. அதன் இருபுறமும் தாழம்பூப் புதர்கள் காடாக மண்டி வளர்ந்திருந்தன.

அந்த வாய்க்காலின் கரையைப் பிடித்துக்கொண்டே பூங்குழலி நடந்தாள். தாழம்பூச் செடிகளின் முட்கள் சில சமயம் குத்தின. அதை அவள் பொருட்படுத்தவில்லை. தாழம்பூக்கள் வெடித்து மலர்ந்து நறுமணத்தைப் பரப்பின. அந்த மணம் மற்றவர்களைப் போதை கொள்ளச் செய்திருக்கும். ஆனால் பூங்குழலிக்கு அந்த ஞாபகம் கூட வரவில்லை.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## ஒட்டகத்தைக் கொன்ற காகம்

(நேற்றைய தொடர்ச்சி...)

அதற்கு காகம், ராஜா! ஒரு குடும்பத்தைக் காப்பாற்ற அந்தக் குடும்பத்தில் உள்ள ஒரு நபரை இழக்கலாம். ஒரு கிராமத்தைக் காப்பாற்ற அந்தக் கிராமத்திலுள்ள ஒரு குடும்பத்தை இழக்கலாம்.

ஒரு நாட்டைக் காப்பாற்ற அந்த நாட்டிலுள்ள ஒரு கிராமத்தை இழக்கலாம். ஆதலால், இது தவறில்லை என்று அதே சாஸ்திரங்கள் தான் சொல்லியுள் ளன! என்றது காகம்.

சிங்கராஜா ஒட்டகத்தைக் கொல்ல சம்மதிக்கவில்லை. ராஜா அவர்களே! அந்த ஒட்டகமே தங்களிடம்



வந்து, என்னைக் கொல்லுங்கள் என்று கூறினால், தாங்கள் அதனைக் கொல்லச் சம்மதிப்பீர்கள் தானே! என்றது காகம்.

ஆமாம் என்றார் சிங்கராஜா. அப்போது, இவர்களைத் தேடி அந்த ஒட்டகம் வந்தது. ஒட்டகம் அருகில் வந்ததும் காகம் தந்திரமாக, ராஜா! இன்று உங்களுக்கு எங்குமே இரை கிடைக்கவில்லை. தாங்கள் இன்று பசியுடன் இருப்பதை என்னால் பார்த்துக [illegible] கமுடியாது. ஆதலால், தாங்கள் என்னைக் கொன்று தங்களின் பசியினைப் போக்கிக் கொள்ளுங்கள் என்று காகம் கூற சொன்னதும் ஒட்டகமும் அதை கூறி தழுதழுத்தது.

நீ எனக்கு ஒருவாய் உணவாக அல்லவா அமைந்து விடுவாய் என்றது சிங்கராஜா. உடனே, நரி, ராஜா அப்படியானால் தாங்கள் என்னைக் கொல்லுங்கள் என்று போலிப் பணிவு காட்டியது. மிகவும் சிறியவன். என் பசிக்கு நீ பயனற்றவன் என்று அதையும் மறுத்தது சிங்கராஜா. உடனே புலி, அப்படியானால் ராஜா, தாங்கள் என்னைக் கொல்லலாமே! என்று நடித்தது. நீ பருத்தவனாக இல்லை. ஆதலால், நீயும் என் பசிக்கு ஏற்றவனில்லை என்றது சிங்கராஜா.

மூவரும் ராஜாவுக்காக போட்டி போட்டுக் கொண்டு தங்கள் உயிரைத் தர முன் வந்ததில் மனம் நெகிழ்ந்து போன ஒடடகம், ராஜா! இந்தக் காட்டில் நான்தான் உரமானவன். பருத்தவன். நான் உங்களின் பசிக்கு ஏற்றவன். தாங்கள் தான் இந்தக் காட்டில் எனக்கு அடைக்கலம் கொடுத்தீர்கள். தங்களின் பசியைப் போக்கும் நல்ல காரியத்தை, நான் என் உயிரைக் கொடுத்தாவது செய்வேன். ஆதலால், தாங்கள் என்னைக் கொல்லுங்கள் என்றது. உடனே நரியும் புலியும் ஒட்டகத்தின்மீது பாய்ந்து அதனைக் கொன்றன.

நீதி: தீயவர்களின் கைகளில் அகப்பட்டுக் கிடப்பதைக் காட்டிலும் அதனோடு சண்டையிட்டு மடிவதே சிறந்தது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதப்பிடிவாதத்துக்கு மூளையில்லை. அதனால் யோசிக்க முடியாது. இதயமில்லை, அதனால் உணர முடியாது. ~ ஒகானல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இனத்தின் ஒற்றுமைக்கு குந்தகம் இழைத்துவிடாதீர்கள்

அன்பார்ந்த தமிழ் உறவுகளே! வட மாகாணத்தின் நிலைமைகளை மிகவும் உன்னிப்பாக அவதானிக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு.

நம் தமிழினம் மதத்தால் ஒருபோதும் பிரிந்தது இல்லை. மதவாத சிந்தனைகளை நம் மக்கள் ஒருபோதும் அங்கீகரித்ததும் கிடையாது.

இருந்தும் வடக்கு மாகாணத்தின் சமகால நிலைமைகள் பல்வேறு சந்தேகங்களையும் ஊகங்களையும் ஏற்படுத்துவது மிகவும் வேதனைக்குரியது.

தமிழ் மக்களை அவர்களுக்குள் மோத வைப்பதற்கு மதவாதம் என்ற விச ஆயுதம் பிரயோகிக்கப்படுகிறதா? என்று நினைக்குமளவுக்கு நிலைமைகள் எல்லை மீறிப் போகின்றன.

நேற்றுக்கூட (05) ஓர் அன்பர் அலுவலகத்துக்கு வந்து சந்தித்தார்.

நம்மைக் கடுமையாகக் கடிந்து கொண்டார். இந்து சமயத்தை அழிப்பதற்கு - இந்து சமயத்தின் எழுச்சியை வெட்டிச் சரிப்பதற்கு சதி நடப்பது உங்களுக்குத் தெரியாதா? என்று கேட்ட அவர்,

தெல்லிப்பழை மகளிர் இல்லத்தை வைத்து சதித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்றெல்லாம் கூறினார்.

தவிர, வடக்கு மாகாண அரச பதவிகளை சுட்டிக்காட்டி இந்த நியமனங்கள் எல்லாம் எதற்கானதென்று உங்களுக்குப் புரியாது எனக் கூறிய அவர், யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் இருந்த சைவப் படங்களை அகற்றியது அதன் ஓர் அடையாளம் என்று நவின்றார்.

குறித்த சுவாமிப் படங்கள் மீளவும் வைக்கப்பட்டுவிட்டனவே என்று நாம் பதிலளிப்பதைக்கூட அவர் ஏற்றுக் கொள்வதாக இல்லை.

ஈற்றில் சில ஆவணங்களை நம் மேசையில் வீசிவிட்டு வெறுப்போடு சென்று விட்டார்.

பரவாயில்லை. அது அவரின் உணர்வு வெளிப்பாடு.

ஆனால் அந்த தனிநபரின் கருத்து நம் மக்கள் மத்தியில் பரவலாகப் பேசுபொருளாகி இருப்பது கண்டு அதிர்ந்து போனோம்.

ஆம், கடந்த சில நாட்களாக வடக்கு மாகாண மக்கள் ஏதோவொரு வகையில் வேதனையுற்றுள்ளனர்.

இந்த உண்மையை வடக்கு மாகாண அரச பரிபாலனம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதேநேரம் நம் அனைத்து சமயத் தலைவர்களும் மௌனம் காக்காமல், இன ஒற்றுமையின் பொருட்டு மதவாதத்தின் மூல வேரை வெட்டி விட வேண்டும்.

ஏனெனில் எங்கள் தமிழினம் உள்ளக முரண்பாட்டைச் சந்திக்குமாயின், எங்களுக்காக நடந்த அத்தனை தியாகங்களும் வீணாகிப் போய்விடும்.

# நாட்டைக்கட்டியெழுப்ப வேண்டுமானால் உண்மையை மக்களுக்குச் சொல்லுங்கள்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் உண்மை நிலையை மக்களுக்குச் சொல்ல வேண்டும். அதை விடுத்து பொய்களைக் கொட்டிய ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவின் விசேட உரைக்கு ஒஸ்கார் விருதை விட மேலான விருதுகள் வழங்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றும் நாட்டு மக்கள் ஏமாற்றப்பட்டு, ஒட்டுமொத்த நாடும் பொய்களால் வஞ்சிக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதியால் கண்துடைப்பு நாடகமே அரங்கேற்றப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. அவரின் விசேட உரைக்கு ஒஸ்கார் விருதை விட மேலான விருதுகள் வழங்கப்பட வேண்டும்.

365 நாட்களும் 24 மணி நேரமும் பொய் சொல்வதையே வழக்கமாகவும், தொழிலாகவும் கொண்டு மக்களை ஏமாற்றி வருகின்றார் ஜனாதிபதி.

இல்லாத ஒன்றை இருப்பதாகச் சொல்லி, இருக்கும் ஒன்றை இல்லையென்று சொல்லி, பொய்யை உண்மையாக்கி, உண்மையைப் பொய்யாக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான மாயையான பயணத்தில் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமானால், நாட்டின் உண்மை நிலையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். உண்மையை இந்த நாட்டு மக்களுக்குச் சொல்ல வேண்டும். எமது நாடு 92 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான கடனில் சிக்கித் தவிக்கின்றது.

இந்தக் கடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களைக் கொண்டுள்ளது. இந்தக் கடன் தொடர்பில் அறியும் உரிமை மக்களுக்கு இருக்கின்றது என்றார். (ம-7,10)

# சட்டவிரோத நியமனங்களை உடனடியாக இரத்துச் செய்க

### தேர்தல்கள் ஆணைக்குழு ஆளுநர்களுக்குப் பணிப்பு

மாகாண ஆளுநர்களினால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத நியமனங்களை உடனடியாக இரத்துச் செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு உத்தரவு பிறப்பித்துள்ளது.

சட்டவிரோத நியமனங்களை உடனடியாக இரத்து செய்யுமாறும், நிலுவையில் உள்ள நியமனங்களை இடைநிறுத்துமாறும் மாகாண ஆளுநர்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டம் நடைமுறையில்இருக்கும்வேளையில் இவ்வாறான பதவிகளைவழங்குவதுசட்டவிரோதமானது என ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும்சூழலில் அரசாங்கம் தமது தேர்தல் தேவைகளுக்காக அரச ஊழியர்களை பயன்படுத்திக்கொள்ளும் நோக்கில் சட்டவிரோத நியமனங்களை ஆளுநர்கள் ஊடாக வழங்கி வருவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுவந்த பின்புலத்திலேயே தேர்தல்கள் ஆணைக்குழு இந்த அவசர உத்தரவினை பிறப்பித்துள்ளது. (ம-7,10)

## மட்டக்களப்பு விமான நிலையம் அருகே 12 கண்ணிவெடிகள் மீட்பு

மட்டக்களப்பு விமான நிலையத்தின் எல்லையான திருப்பெரும்துறை பகுதியில் 12 நிலக் கண்ணிவெடிகளை கண்ணிவெடி அகற்றும் சர்வதேச நிலச்சுரங்க ஆய்வு குழுவான (எம்.ஏ.ஜி) அமைப்பினர் மீட்டெடுத்து நீதிமன்ற அனுமதியுடன் இராணுவத்தினர் அதனை வெடிக்கவைத்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

யுத்தகாலத்தில் திருப்பெரும்துறை வேளாங்கன்னி தேவாலயத்திற்கு அருகில் அமைக்கப்பட்ட விமானப்படை முகாமை சுற்றி அந்த பகுதியில் ஏராளமான கண்ணிவெடிகள் நிலத்தில் புதைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அங்கிருந்து விமானப்படை முகாம் மூடப்பட்டு படையினர் வெளியேறிய போதும் நிலத்தில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் இருந்துள்ள நிலையில் அவற்றை அகற்றுமாறு படையினர் எம்.ஏ.ஜி கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்திடம் கோரியதையடுத்து அந்த பகுதியினை அடையாளமிட்டு கண்ணிவெடிகளை தேடி சோதனையிடும் நடவடிக்கையினை புதன்கிழமை (4) ஆரம்பித்துள்ளனர்.

இதன்போது, புதையுண்டிருந்த 12 கண்ணிவெடிகள் மீட்கப்பட்டு செயலிழக்க செய்யப்பட்டது. (ம-7,10)

# கதிர்காமக்கந்தனுக்கு இன்று கொடியேற்றம்

ஏமகூடம் என கந்த புராணம் போற்றும் வரலாற்றுத் தொன்மைமிகு ஆலயமான கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவானது இன்று சனிக்கிழமை சுப முகூர்த்த வேளையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 16 நாட்கள் நடைபெறும் உற்சவந்தனில் இம்மாதம் 18ம் திகதி வியாழக்கிழமை தீமிதிப்பு உற்சவமும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு பிரதான பெரஹரா நடைபெற்று மறுநாள் மாணிக்க கங்கையில் நீர்வெட்டு உற்சவம் எனப்படும்தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ம-7,10)

## பொலன்னறுவையில்

# விபச்சார விடுதி முற்றுகை 11 பெண்கள் கைது

(பொலன்னறுவை)

ஆயுர்வேத மசாஜ்நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபச்சார விடுதியொன்றை பொலன்னறுவை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முற்றுகையிட்டுள்ளனர்.

குறித்த சுற்றிவளைப்பில், விபச்சார விடுதியை நடத்தி வந்த நான்கு முகாமையாளர்கள் உட்பட விபச்சாரத்தில் ஈடுபட்ட 11 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நான்கு முகாமையாளர்களும் மொனராகலை, சிகிரியா, கம்பஹா, மஹியங்கனை ஆகிய இடங்களில் வசிக்கும் 19 மற்றும் 35 வயதுடையவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, திம்புலாகல தலுகான, ஹபரணை, களனி, மொனராகலை, பூனானி, அனுராதபுரம் மற்றும் வெல்லவாய பிரதேசங்களில் வசிக்கும் 19, 27, 33, 47, 33, 48 வயதுடைய பெண்களே விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், சந்தேகநபர்களான முகாமையாளர்கள் விபச்சாரத்தில் ஈடுபட்ட பெண்களுக்கு குறைந்த பணத்தை கொடுத்து அதிக பணம் சம்பாதித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், முற்றுகையிடப்பட்ட விபச்சார விடுதி அந்த பகுதியில் நீண்ட காலமாக இயங்கி வந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ம-7,10)

# கெஹலியவின் வங்கி கணக்குகள் நிறுத்தம்


முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரின் 6 குடும்ப உறுப்பினர்களின் நிலையான வைப்பு கணக்குகள் மற்றும் ஆயுள் காப்புறுதிக் கொள்கைகளை 3 மாதங்களுக்கு இடைநிறுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன இதற்கான உத்தரவை பிறப்பித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நிலையான வைப்புக் கணக்குகள் மற்றும் ஆயுள் காப்புறுதிகளின் பெறுமதி 97 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த வங்கிக் கணக்குகள் மற்றும் ஆயுள் காப்புறுதிக் கொள்கைகள் கெஹலிய ரம்புக்வெல்ல, அவரது மனைவி, மூன்று மகள்கள் மற்றும் ஒரு மகளின் கணவர் ஆகியோரின் பெயரில் பராமரிக்கப்பட்டு வந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்களாதேஷ் உருவான கதையும் அந் நாட்டின் தேர்தல்களும் - ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

11

ஷேக் ஹசீனா முதல் முறையாக பிரதமராக பதவியேற்றார்.74.96% வாக்குகள் பதிவாகியிருந்தன, இது அன்றுவரை அதிகபட்சமாக இருந்தது. சில மாதங்களுக்கு முன்பு பெப்ரவரியில் நடந்த சர்ச்சைக்குரிய தேர்தல்களைத் தொடர்ந்து 1996 இல் நடைபெற்ற இரண்டாவது தேர்தல் இதுவாகும்

தேர்தல் பிரசாரத்தின் போது இராணுவத்தால் சதிப்புரட்சி முயற்சி நடந்தது. மே 12 அன்று, ஜனாதிபதி பிஸ்வாஸ் இராணுவத் தளபதி ஜெனரல் அபு சலே முகமது நசிமை பதவி நீக்கம் செய்தார். இதற்குக் காரணம் இராணுவத் தளபதி இராணுவ விதிகளை மீறி அரசியல் கட்சிகளுடன் இணைந்ததாகக் கூறப்படும் இரண்டு ஜெனரல்களுக்கு ஓய்வு அளிக்கும் ஜனாதிபதி உத்தரவை நிறைவேற்ற மறுத்தார் என்பதேயாகும். நாசிம் அவருக்கு விசுவாசமான துருப்புக்களை ஏற்பாடு செய்து ஜனாதிபதிக்கு எதிராக கிளர்ச்சி செய்தார்.

இதன் விளைவாக, ஜனாதிபதி பிஸ்வாஸ், நசிமை பதவி நீக்கம் செய்து புதிய தலைமை அதிகாரியை நியமித்தார். ஜனாதிபதிக்கு விசுவாசமான துருப்புக்கள் தலைநகரில் உள்ள அரசாங்க நிறுவனங்களைப் பாதுகாப்பதற்காக அணிதிரட்டப்பட்டன மற்றும் நாசிம் இராணுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். மற்றும் சதிப்புரட்சி முயற்சி தோல்வியடைந்தது.

மொத்தம் 2,574 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டனர். அவாமி லீக், பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி மற்றும் ஜமாத்-இ-இஸ்லாமி பங்களாதேஷ் ஆகிய அனைத்தும் 300 வேட்பாளர்களின் முழுப் பட்டியலை முன்வைத்தன. ஜாதியா கட்சி 293 வேட்பாளர்களையும், இஸ்லாமிய ஒய்க்கிய ஜோட் 166 மற்றும் ஜாதிய சமாஜ்தந்திரிக் தளம் (ரப்) 67 வேட்பாளர்களையும் போட்டியிடவைத்தன .மற்ற சிறு கட்சிகள் இணைந்து 864 வேட்பாளர்களை முன்மொழிந்தன. 284 வேட்பாளர்கள் சுயேச்சைகளாகப் போட்டியிட்டனர்.

தேர்தலில் வங்கதேச அவாமி லீக் வெற்றி பெற்றது. அவர்கள் ஒரு எளிய பாரா்ளுமன்ற பெரும்பான்மையைப் பெறவில்லை. 146 இடங்களை வென்றனர். ஆட்சி அமைப்பதற்குத் தேவையான பெரும்பான்மை 151. அவாமி லீக் மற்றும் பிஎன்பி இடையேயான மக்கள் வாக்குப் பங்கின் அடிப்படையில் பார்த்தால் வித்தியாசம் 4%இற்கும் குறைவாகவே இருந்தது. இருப்பினும்,அவாமி லீக் பிஎன்பியை விட 30 இடங்களில் முன்னிலை பெற்றது. தேர்தலில் 74% அதிக வாக்குகள் பதிவாகின.

ஜாதியா கட்சியின் ஆதரவுடன், அவாமி லீக்கின் தலைவரான ஷேக் ஹசீனா, யூன் 23 அன்று தனது முதல் பிரதமராக பதவியேற்றதன் மூலம் அரசாங்கத்தை அமைக்க அழைக்கப்பட்டார். வங்காளதேசத்தின் ஏழாவது பாராளுமன்றத்தின் முதல் கூட்டம் 14 யூலை 1996 அன்று நடைபெற்றது.

நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 300 இடங்களில், எட்டு இடங்களில் மட்டுமே பெண் வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். பாராளுமன்றத்தில் பெண்களுக்கு கூடுதலாக 30 இடங்கள் ஒதுக்கப்பட்டன. அதில் 27 இடங்கள் அவாமி லீக்கிற்கும் மற்றவை ஜாதியா கட்சிக்கும் வழங்கப்பட்டது.

ஹசீனாவின் நிர்வாகம் அதன் முழு ஐந்தாண்டு காலத்தை நிறைவு செய்தது. அவ்வாறு செய்த முதல் பாராளுமன்ற நிர்வாகம் இதுவாகும். பிரதம மந்திரி ஷேக் ஹசீனா தலைமையிலான ஏழாவது பாராளுமன்றம் 13 யூலை 2001 அன்று கலைக்கப்பட்டது. அரச அதிகாரம் நீதிபதி லத்திஃபுர் ரஹ்மான் தலைமையில் காபந்து அரசாங்கத்திற்கு, (முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அமையும் வரை தற்காலிகமாகப் பொறுப்பில் இருக்கும் அரசு) மாற்றப்பட்டது. அடுத்த பாராளுமன்ற தேர்தல்கள் ஒக்டோபர் 2001 இல் நடைபெற்றது.

காபந்து அரசாங்கத்தின் உயர் மட்ட உறுப்பினர்கள் எந்த அரசியல் கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. அவர்கள் தேர்தலில் போட்டியிடவும் அனுமதிக்கப்படுவதில்லை. காபந்து அரசாங்கத்தின் முக்கிய நோக்கமானது, பதவி விலகும் அரசாங்கத்தினால் எந்தவொரு அரசியல் செல்வாக்கும் இன்றி சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் தேர்தலை நடத்துவதற்கான சமமான சூழலை உருவாக்குவதேயாகும்.

### 2001 பங்களாதேச பொதுத் தேர்தல்

பங்காளதேசத்தில் 1 ஒக்டோபர் 2001 அன்று பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. பாராளுமன்றத்தின் 300 தனி இருக்கை தொகுதிகளில் 54 கட்சிகள் மற்றும் 484 சுயேட்சைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 1,935 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். 1996 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட காபந்து அரசாங்கத்தின் தலைமையின் கீழ் நடத்தப்பட்ட இரண்டாவது தேர்தல் இதுவாகும்.

இதன் விளைவாக பங்களாதேஷ் தேசியவாத கட்சி (BNP), ஜமாத்-இ-இஸ்லாமி பங்களாதேஷ், ஜாதியா கட்சி மற்றும் இஸ்லாமிய ஒய்க்யா ஜோட் ஆகிய நான்கு கட்சி கூட்டணிக்கு வெற்றி கிடைத்தது. பங்களாதேஷ் தேசியவாத கட்சி தலைவர் கலிதா ஜியா பிரதமரானார்.

BNP கட்சி 300 இடங்களில் 193 இடங்களைப் பெற்று தனிப் பெரும்பான்மையுடன் வென்றது. BNPயின் கூட்டணிக் கட்சிகளான ஜமாத்-இ-இஸ்லாமி பங்களாதேஷ், ஜாதியா கட்சி மற்றும் இஸ்லாமி ஒய்க்யா ஜோட் ஆகிய கட்சிகளும் இணைந்து 23 இடங்களை வென்றன. கூட்டணி மொத்தமாக 216 இடங்களைக் கொண்டு வந்தது. அவாமி லீக் 62 இடங்களை மட்டுமே பெற்றது.

நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 300 இடங்களில், ஏழு இடங்களில் மட்டுமே பெண்கள் வெற்றி பெற்றனர். இந்த பாராளுமன்றத்தில் பெண்களுக்கான ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை (அவை நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட 300 இடங்களுக்கு கூடுதலாக) 30இல் இருந்து 45 ஆக அதிகரிக்கப்பட்டிருந்தது. பெண்களுக்கான இந்த 45 இட ஒதுக்கீடுகளில் 36 இடங்கள் BNP கட்சிக்கு வழங்கப்பட்டன.

BNP ஆல் பெரும் வாக்கு மோசடி செய்யப்பட்டதாக அவாமி லீக் கட்சி குற்றம் சாட்டினாலும் சர்வதேச மற்றும் தேசிய கண்காணிப்பாளர்கள் வாக்குப்பதிவை சுதந்திரமாகவும் நியாயமாகவும் அறிவித்தனர். அவாமி லீக் கட்சியின் குற்றச்சாட்டை தலைமைத் தேர்தல் ஆணையர் மறுத்தார். அவர் குற்றச்சாட்டுகளை "அடிப்படையற்றது" என்று அறிவித்தார். ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்டரின் கார்ட்டர் மையம் ஆகியவற்றின் சர்வதேச பார்வையாளர்களும், வாக்குப்பதிவு 75% இற்கு அதிகமாக இருந்ததை பாராட்டினர்.

தேர்தலை அடுத்து சிறுபான்மை இந்துக்களை குறிவைத்து வன்முறைகள் நடந்ததாக செய்திகள் வெளியாகின. தெளிவான பெரும்பான்மையுடன் BNP தலைவர் கலீதா ஜியா அரசாங்கத்தை அமைக்க அழைக்கப்பட்டார் மற்றும் 10 ஒக்டோபர் 2001 அன்று, பிரதமராக பதவியேற்றார் மற்றும் அவரது அமைச்சரவையை உருவாக்கினார், அதில் அவரது கூட்டணி கட்சிகளின் உறுப்பினர்களும் இருந்தனர். எட்டாவது பாராளுமன்றத்தின் முதல் அமர்வு 28 ஒக்டோபர் 2001 அன்று நடந்தது அதன் புதிய சபாநாயகராக ஜமீருதீன் சிர்கார் தெரிவு செய்யப்பட்டார்.

ஜியாவின் நிர்வாகம் 28 ஒக்டோபர் 2001 முதல் 27 ஒக்டோபர் 2006 வரை ஐந்தாண்டு காலத்தை நிறைவு செய்தது. இருப்பினும், ஒரு காபந்து அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்ட சர்ச்சைகள், நடுநிலைமை குறித்து கட்சிகளுக்கு இடையே இருந்த கருத்து வேறுபாடுகள், 2006-2008 வங்காளதேச அரசியல் நெருக்கடிக்கு வழிவகுத்தது. இது இறுதியில் இராணுவத் தலையீட்டில் முடிந்தது. டிசம்பர் 2008 வரை புதிய தேர்தல்கள் நடத்தப்படவில்லை.

### 2006-2008 பங்களாதேஷ் அரசியல் நெருக்கடி

2006-2008 பங்களாதேஷ் அரசியல் நெருக்கடியானது, பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி நிர்வாகத்தின் பதவிக்காலம் முடிவ டைந்ததைத் தொடர்ந்து, அக்டோபர் 2006 இறுதியில் ஒரு காபந்து அரசாங்கம் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டதால் தொடங்கியது. பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி அரசாங்கம் தலைமை நீதிபதியின் ஓய்வுபெறும் வயதை அரசியலமைப்புச் சட்டத்திற்கு புறம்பாக உயர்த்தியது.

பங்களாதேஷின் தனித்துவமான முறையின்படி, தேசிய நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில், ஒரு நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட தொண்ணூறு நாட்களுக்குள் நடத்தப்பட வேண்டும். இந்த செயல் முறையை மேற்பார்வையிடவும் இடைக்கால நிர்வாகத்தை நிர்வகிக்கவும் ஒரு காபந்து அரசாங்கம் தெரிவு செய்யப்படும்.

முதலில் ஒரு காபந்து அரசாங்கம் முறைசாரா முறையில் நிறுவப்பட்டது, பின்னர் காபந்து அரசாங்கம் விதி அரசியலமைப்பில் 1996 இல் திருத்தம் மூலம் இணைக்கப்பட்டன.

தலைமை ஆலோசகர் பதவி (பிரதமர் அந்தஸ்துடன்) உச்ச நீதிமன்றத்தின் கடைசியாக ஓய்வு பெற்ற தலைமை நீதிபதியின் நியமனம் மூலம் நிரப்பப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் அரசாங்கத்தை நிர்வகிப்பதில் உதவுவதற்காக அதிகபட்சம் பத்து ஆலோசகர்களை (அமைச்சர்கள் அந்தஸ்துடன்) நியமிக்கிறார். 90 நாள் இடைக்காலத்தில் காபந்து அரசாங்கமே நாடு முழுவதும் நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவது உட்பட அனைத்து மாநில விவகாரங்களையும் நடத்துகிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணொருவரின்...

அக்கராயன் குளத்தின் பின் பகுதியிலேயே அடையாளம்தெரியாத குறித்த நபரின் சடலத்தினை பொலிஸார் மீட்டுள்ளனர்.

மேலும், சம்பவம் தொடர்பாக ஐயங்கன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,33)

## வேலணை...

வேலணை துறையூர் பகுதி யினை சேர்ந்த 46 வயதான மீனவர் ஒருவரே கடற் றொழிலுக்கு சென்ற நிலையில் சுருவில் கடற்கரையில் சடலமாக கரையொதுங்கியுள்ளார்.

இதுகுறித்து மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10,33)

## மீனவர் பிரச்...

ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநரும் இணைத் தலைவருமான பி.எஸ். எம். சார்ள்ஸ் ஆகியோர் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சு வார்த்தைகளை மீண்டும் முன்னெடுத்து, இந்திய - இலங்கை மீனவ விவகாரத்தினை தீர்ப்பதற்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இதன்போது, மாவட்டத்தில் இடம் பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டபோது, இந்திய மீனவர்களின் சட்டவிரோத செயற்பாடு காரணமாக பாதிக்கப்படும் தங்களுடைய வாழ்வாதாரம் தொடர்பாக போதிய கரிசனை வெளிப்படுத்தப்படுவதில்லையென கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் ஆதங்கம் வெளியிட்டனர்.

அண்மையில் இலங்கைக்கு வந்த இந்திய வெளியுறவு அமைச்சரை சந்தித்தபோதுகூட தமிழ் மக்களின் பிரதிநிதிகளால் மீனவ விவகாரம் பேசப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும் அவர்கள் இதன்போது முன்வைத்தனர்.

இந்நிலையில் தனக்கும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பில் இந்த விவகாரம் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதை அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ம-7,10,33)

## 3 அடிப்படை...

என்ற தொழிலதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்த்து மூன்று அடிப்படை உரிமைகள் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளரான வசந்த முதலிகே மற்றும் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியன இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

இதேவேளை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மேலும் இந்த மனுவை விசாரணை செய்வதற்கு ஐவர் அடங்கிய நீதியரசர்கள் குழாமை, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## அத்தியாவசியப்...

யாவசியப் பொருட்களை விடுவிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளில் திருத்தங்களை மேற்கொள்ளும் அதிகாரிகளின் தன்னிச்சையான தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து சுங்கத் தொழிற்சங்க உறுப்பினர்கள் வேலைநிறுத்தப் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

எனினும், இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டியவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் சுங்கத் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கையை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கை நிறைவடைந்துள்ள நிலையில், தாமதமாகியுள்ள அத்தியாவசியப் பொருட்களை விடுவிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதன்படி, எதிர்வரும் 7 ஆம் திகதிக்குள் பொருட்களின் விடுவிப்பு பணிகளை மீட்டெடுக்க முடியும் என எதிர்பார்ப்பதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## தெல்லிப்பழை...

யில் அச்செய்தி உருவாக்கியிருந்தது.

நாற்பது ஆண்டுகளாக மிகப் பெரும் சேவையாற்றி வருகின்ற தெல்லிப்பழை மகளிர் இல்லத்தை எதற்காக மூடவேண்டும் என்ற கேள்விகள் மக்கள் மத்தியில் ஏற்பட்டது மட்டுமன்றி, அது தொடர்பில் வடக்கு மாகாண உயர் அதிகாரிகளிடம் கேள்விகள் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில் உண்மை நிலையைக் கண்டறியும் பொருட்டு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் மூவர் அடங்கிய குழுவொன்றை நியமித்து, நிலைமையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்தார்.

இந்நிலையில் பிரஸ்தாப அதிகாரிகள் குழு நேற்று முன்தினம் (4) தெல்லிப்பழை மகளிர் இல்லத்துக்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கை தயாரித்தது.

பிரஸ்தாப அறிக்கை நேற்று மாலை வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் தெல்லிப்பழை மகளிர் இல்லம் மிகச் சிறப்பாக இயங்குகிறது.

பொலிஸாரின் பணிப்பின் பேரிலேயே குறித்த கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

மகளிர் இல்லத்தின் பாதுகாப்புக் கருதி கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்துமாறு இல்லத்தின் சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் பொலிஸார் பதிவிட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7,10)

## மக...

காரணம்.

இவ்வாறுஇருக்கையில், மகளிர் இல்லத்தை மூடுமாறு தாங்கள் உத்தரவிட்டதாக வெளிவந்த செய்தி எங்களைக் கடும் வேதனைக்கு ஆளாக்கியுள்ளது என பழைய மாணவிகள் ஆளுநரிடம் தெரிவித்தனர்.

இதன்போதே தெல்லிப்பழை மகளிர் இல்லத்தை மூடுமாறு நான் உத்தரவிடவில்லை என்றும் தெல்லிப்பழையில் பதிவு செய்யப்படாமல் இருக்கக்கூடிய வேறொரு சிறுவர் இல்லத்தையே மூடுமாறு தான் பணித்ததாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை மகளிர் இல்லப்பழைய மாணவிகள் தெல்லிப்பழை பிரதேச செயலகம், யாழ்.மாவட்டச் செயலகம், பத்திரிகை அலுவலகங்களுக்கும் சென்று நிலைமையை எடுத்துரைத்தனர். (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.07.05
சீட்டிழுப்பு இலக்கம் 5525
R 2 2 8 3 0 3
அத சம்பத
R 8 3 0 3
சீட்டிழுப்பு இலக்கம் 100

தன நிதானய
திகதி - 2024.07.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1555
S 11 18 35 79 S
18584

மெகா பவர்
திகதி 05/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1873
K 24 02 08 09 34
28413

லக்கி 7 VIP
திகதி 2024.07.05
சீட்டிழுப்பு இலக்கம் 351
V 7 8 2 4 3 8 V

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3767
சீட்டிழுப்பு திகதி 05.07.2024
N 41 43 47 62
N 67292

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.05
சீட்டிழுப்பு இலக்கம் 0834
ரிஷபம் 29 36 46 59 ரிஷபம்
28407 11

உத்தியோகபூர்வ முடிவுகள்
05.07.2024 வெற்றி வாரம் 233
B 6 5 1 5 5 3
41612
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,010,824.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2499 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 05.07.2024 தினம் வெள்ளி
02 23 24 50 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 97,137,324.80

சனிதா
திகதி 2024.07.05 வெற்றி வாரம் 4660
12 27 36 44 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,191,332.80
57582

சசிரி
வெற்றி வாரம் 498
2024.07.05 பச்சை
06 12 27
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,722,520/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4211 வர்ணம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.07.05 தினம் வெள்ளிக்கிழமை
21 35 50 53 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,211,469.60
578962

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 28 10 17 52 60
1675
05.07.2024 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 531,459,337.80


அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2325
சீட்டிழுப்பு திகதி : 2024.07.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.125,476,376.80
16 20 48 74 O
378759

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 256/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 280/= | (Max)3Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 169/= | |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 Kg சம்பா | - 230/= | |
| 1 Kg அவல் | - 260/= | |
| 1kg தீட்டல் பச்சை | - 189/= | |
| 1 Kg வெள்ளைப் பச்சை | - 205/= | |
| 1 Kg உளுத்தம் பருப்பு | - 980/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~115/=~~ |
| 180ml Chik சம்போ | - 350/= | ~~480/=~~ |
| 70g பேபி சோப் | - 110/= | ~~145/=~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 310/= | ~~380/=~~ |
| 400g நெஸ்டமோல்ட் | - 729/= | ~~780/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 142/= | ~~175/=~~ |
| 750g சுபோஷ சத்துமா | - 560/= | ~~590/=~~ |

Max 03
400g Anchor
1005/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(0136)

Happy Supermarket
0777 8080 30



# வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 17 37 684

(135)



# Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street,Jaffna.

(C-0745)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322



# பற்சிகிச்சை

நிரந்தர பல்கட்டுதல் (implant), "கிளிப்" போடுதல் மற்றும் அனைத்து நவீன சிகிச்சைகளும்

**கம்சியா**
**பற் சிகிச்சைப் பிரிவில்**

(யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக, Singer Company அருகில்) நடைபெறுகிறது.
578/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C-0744)

077 375 4490
077 220 2769



அனைத்து நாடுகளுக்குமான
# விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

(C-0745)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர் யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய் நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241



# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- இருபது அடிப்பாதை (20)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா இருபது இலட்சம் 20,00,000/=

(1399)

Golden Real Estate (pvt) Ltd
077 029 4164,
077 329 4130, 077 294 1521



# காணி விற்பனைக்கு

ஊரெழு மேற்கில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு 2 பரப்பு, 3 பரப்பாக பிரித்து தரப்படும். ஊரெழு பலாலி றோட்டில் இருந்து 300m - 400m தூரம், நல்ல சூழல். விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

(1395)

077 617 2892



# V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு

(C-0745)



# வேலைக்கு ஆட்கள் தேவை

மேசன், உதவியாட்கள், சட்டரிங் வேலைக்கு ஆட்கள் தேவை. தங்குமிட வசதி உண்டு. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். செலவுத் தொகை தினந்தோறும் வழங்கப்படும்.

077 97 89 177 / 077 52 98 705

DCSL Site, நவீல்ட் பாடசாலை வீதி,
கைதடி, யாழ்ப்பாணம்.

(133)


# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 . 02 . 1936 | 04 . 07 . 2024 |

## திருமதி கமலாவதி மகேந்திரன்

(முன்னாள் ஆசிரியை, ஓய்வு வெற்ற உப அதிபர் – வட இந்து மகளிர் கல்லூரி)

வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாவதி மகேந்திரன் அவர்கள் நேற்று முன்தினம் 04.07.2024 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி மாணிக்கம் - பூரணம் மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இளைப்பாறிய தபாலதிபர் சதாசிவம்பிள்ளை மகேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும் மகேந்திரன் சத்தியசீலன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதி பணிப்பாளர் அலுவலகம் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புத் தாயாரும் அம்பாலிகையின் (ஆசிரியை - புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை) அன்பு மாமியாரும் காலஞ்சென்ற மாணிக்கம் காராளசிங்கம் (கணக்காளர்), காலஞ்சென்ற திருமதி பத்மாவதி ஏரம்பமூர்த்தி (முன்னாள் ஆசிரியை - வட இந்து மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற மாணிக்கம் தர்மரட்ணம் (பொறியியலாளர்), அவுஸ்திரேலியாவில் வசிக்கும் Dr. புனிதவதி தங்கராசா (ஓய்வு பெற்ற கால்நடை வைத்தியர்), காலஞ்சென்ற மாணிக்கம் சண்முகலிங்கம் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி இந்திராணி சோமாஸ்கந்தன் (கொழும்பு), திருமதி ஜெயராணி சண்முகலிங்கம் (கொழும்பு), சதாசிவம்பிள்ளை பாலேந்திரா(இந்தியா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் (07.07.2024) நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அளவெட்டி இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 685 4726/ 070 685 4726 - ம.சத்தியசீலன்
077 748 7708 - ச.அம்பாலிகை

(C-0743)

தகவல் :
ம.சத்தியசீலன் (மகன்)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
04.04.1945

மறைவு
06.06.2024

கடந்த 06.06.2024 வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

## பொன்னுத்துரை சிவலிங்கம்

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 06.07.2024 இன்று சனிக் கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். தொடர்ந்து மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியை களிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

(130)

பாரதி வீதி,
கம்பர்மலை,
உடுப்பிட்டி வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... அவர்களது அச்சகத்தில் 06.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org